தென்மொழி

நெஞ்சு இனிக்குமா ?

"எந்தமிழர் அரசேற்றார்; எடுத்தவினை
முடித்திட்டார்; இருளைச் சீய்த்தார்;
செந்தமிழை முடிவைத்தார்; செய்தொழிலால்
தமிழ் நிலத்தைச் சிறக்கச் செய்தார்;
தந்தபயன் அளவில்லை; தம்புகழ்க்கும்
வரையில்லை; தகவாம்" என்றே
எந்தநொடிச் செவிமடுப்போம்; இளைத்தவுடல்
பூரிப்போம்; இனிப்போம் நெஞ்சே !

சுவடி : ௫. ஓலை : ௩. மேழம் (சித்திரை) ௧௯௯௮



தனித்தமிழ்
இலக்கியத்
திங்களிதழ்

ரூ 0 50 காசு

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே

சுவடி 5 :: ஓலை-3

மேழம்(சித்திரை) தி. பி. ௧௯௯௮ (1967–ஏப்பிரல்)

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்
உறுப்பாசிரியர்:– தங்கப்பா
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1

முத்தையனின் சமசுக்கிருத ஆராய்ச்சி!

'ஆண்டையின் அடிமைக்கு நீண்டது கையே' என்பதும் 'ஆண்டை அமர்ந்து சொன்னால் அடிமை நிமிர்ந்து சொல்வான்' என்பதும், ''ஆண்டையின் புளுகு அரைப் புளுகானால், அடிமையின் புளுகு முழுப்புளுகு'' என்பதும் பழமொழி கள்! இவை ஆரிய வரலாற்றில் எவ்வளவில் உண்மைகளாய் நின்றன என்பதைக் கடந்தகாலத் தமிழக ஆரியப் போராட்ட வரலாறுகள் நன்கு உணர்த்தும். ஆரியர் பண்ணி வைத்த பழங்கதைப் பன்

னூல்களிலும், வரலாறுகளிலும் ஆரியர்க்கு ஏதோ ஒருசில காரணங்கள் பற்றி அடிமைகளாய் நின்ற தமிழர் -அல்லது திர விடர் எத்துணையுளவு அவ்வாரியரினும் தம் தம் குலத்துக்கே கோடரிகளாய் நின்றனர் என்பதை எல்லாரும் அறிவர். அநும, வீடண, பிரகலாதர் காலத்திலிருந்து, மிக அண்மைக் காலத்தில் ஆரிய அடிவருடிகளாய் விளங்கும் திரு. வையாபுரி, திரு. சேதுப்பிள்ளை, திரு. தெ.பொ.மீ. திரு. முத்து-சண்முகம்வரை, இப்போக்கில் ஓர் இம்மி யுளவும் பிசகாமலேயே நடந்து வருவது கண்கூடு. ஆனால், இத் தகைய வையாபுரி வழியில் சென்னைத் தொழிற்கல்வி நெறியாளர் திரு. முத்தையன் அவர்களும் வைத்தெண்ணத் தக்கவர் என்பதைப் பற்றித் தமிழர் பலரும் அறிந்திருக்க வழியில்லை. இக்கூற்றுக்கு திரு. முத்தையன் அவர்கள் அண்மையில் எழுதி வெளியிட்ட "சமசுக் கிருதம் கற்பதற்காக ஒரு வேண்டுகோள்" "A plea for the study of Sanskrit" என்ற நூலே சான்று.

இந்தவேண்டுரை ஐந்து பக்கங்கள் கொண்டது. இதன் தொடக்கம், "கல்வி கற்பதில் நம் நோக்கம் என்ன?" என்று தொடங்கி, "சமசுக்கிருதத்தின் வழி, பண்டை மெய்யறிவு இலக்கி யத்தைப் படிப்பதால், நாம் ஒவ்வொரு நிகழ்விற்கும் காரணமான ஒரேபடித்தான ஒன்றிய அடித்தளத்தை ஊடுருவி நோக்கும் உள் ளொளியைப் பெறலாம்" என்று ஆற்றுப்படுத்தி, "சமசுக்கிருத மொழியின் சிறப்பை நாம் அறிந்து கொண்டால், நாம் நம்மைத் தேவர்களின் நிலைக்கு உயர்த்திக் கொள்ளலாம்;நமது நாடும் "தேவ நகர்" என்னும் அதன் பழைய நிலையைத் திரும்பப் பெறும்" என்ற வேண்டுகோளுடன் முடிகின்றது

ஒரு வேதப்பாடசாலையின் தலைவராக இருந்துகொண்டோ, ஓர் ஆரிய சமயத் தலைவராக இருந்துகொண்டோ, ஒரு சமசுக்கிருதக் கல் லூரியின் தலைவராக இருந்துகொண்டோ இவ்வுரையை திரு. முத்தையன் கூறவில்லை. அப்படிக் கூறியிருந்தாலும் அதைப்பற்றி நாம் ஒருசிறிதும் பொருட்படுத்தியிருக்க மாட்டோம். ஆனால் அவ் வாறின்றிக் கிண்டி பொறியியற் கல்லூரியின் 'அடிப்படை இயந்திர ஆராய்ச்சி மன்றத்தின்' தலைவராகவும், சென்னைத் தொழில் நுட்பக் கல்வி நெறியாளராகவும் இருந்துகொண்டு இக்கருத்தை மாணவர்களி டம் பரப்பிக்கொண்டு வருவதால்தான், நாம் கவலையுடனும் அக்கறை யுடனும் இதில் கருத்துச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்நிலையில் நாம் ஒன்றைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டி யுள்ளது. திரு முத்தையனின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பைப் பற்றியோ, அவர் ஆரியப் பார்ப்பனரின் அடிவருடியாய் இயங்கு வதைப்பற்றியோ, அவ்வாரியப் பார்ப்டனர்க்குத் தம் வாழ்நாட் காலமெல்லாம் அடிமைப்பட்டு மெய்த்தொண்டு ஆற்றுவதைப் பற்றியோ நாம் துளியும் கவலைப்படவில்லை. ஆனால் அவர் ஏற்றி ருக்கும் பொறுப்பில் இருந்துகொண்டு இப்படியெல்லாம் தான்தோன் றித் தனமாக உளறிக் கொட்டுவதைத்தான் நம்மால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

திரு. முத்தையனின் கருத்துப்படி சமசுக்கிருதத்தில் இருக்கும் பண்டைய இலக்கியங்கள் என்று எவற்றைக் குறிப்பிடுகின்றார் என் பதை நம்மால் அறியக் கூடவில்லை. ஒருவேளை ஆரிய வேதங்களை யும் அவற்றை அடியொட்டி வரைந்த உபநிடதங்களையும், மிருதிநூல் களையும், அவற்றின் உள்ளுரைகளை எடுத்தியம்பும் பழங்கதைப் பனுவல்களையும் அவை போன்ற பிறவற்றையுமே குறிப்பிடுவதாகக் கொண்டால், அந்த நூல்களில் எந்த எந்தப் பகுதிகளில் என்னென்ன வகையில் மெய்யறிவு விளங்கி நிற்கின்றதென்பதையும், அவ்வறி வால் பெறும் உள்ளொளி எத்தகையது என்பதையும் அவர் எடுத்துக் காட்டுவாரானால், அவர் கருத்துகளை நாம் அடிக்கு அடி, சொல் லுக்குச் சொல், எழுத்துக்கு எழுத்து மறுத்துக் காட்டி அவர் மதுகையை அறுத்தெறிய முடியும். சமசுக்கிருத மொழியாராய்ச்சி என்பது வேறு, சமசுக்கிருத மொழியின் நூல் ஆராய்ச்சி என்பது வேறு. ஒன்றுமறியாத மாணவர்களின் கட்டுப்பாடான இயக்கத்தைத் தம் அடிமைப் போக்குக்கு உரமாகப் பயன்படுத்திக்கொண்டு, முத்தையன் இவ்வாறு தாம் உண்ட ஆரியச் சோற்றின் தன்மை யைத் தம் அடி வயிற்றிலிருந்து வாய் வழியாகக் கக்கிக் காட்டிக் கொண்டிருப்பது அவர் கற்ற கல்விக்கும் உற்ற பொறுப்பிற்கும் மிக வும் இழுக்கே என்பதை அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆரியர் வேதங்களும், அவர்தம் எண்ணற்ற நூல்களும் எந்த மெய்யறிவுக் கண்ணோட்டத்துடனும் எழுதப் பெறுமல், தம்மை நிலத் தேவர் என்று காட்டவும், மக்கள் பிறரால் தமக்கு ஏதும் தீங்கு வரா மல் காத்துக் கொள்ளவும், தமக்கு வேண்டாத மக்களை ஒழித்துக் கட்டும் வேண்டுதல்களாகவுமே எழுதப் பெற்றன என்ற உண்மையை அணுவாராய்ச்சியாகக் கீழைநாட்டு மேலை நாட்டு அறிஞர்கள் பலநும்

பன்னூற்றுக் கணக்கான நூற்களில் தெளிவு படுத்தியிருக்கின்றனர் மேலும் அவரால் எழுதப் பெற்ற சில மெய்யறிவுக் கொள்கைகளுக்கும், அவரால் கொள்ளப் பெற்ற சில உயர்ந்த நாகரிகப் பண்பாட்டிற்கும் தமிழர் கொண்டிருந்த சில அடிப்படைக் கொள்கைகளே முழுக்காரண மாக இருந்தன என்பதையும் அந்நூலாசிரியர்கள் வலியுறுத்திக் கூறி யுள்ளனர். [இவ்வுண்மைகள் சி. ஆர். அண்ட்டர் எழுதிய புதிய ஆய்வுரை (New Review) என்ற நூலிலும், ஈ. பி. ஏவல் எழுதிய இந்திய வரலாற்றுக் குறுக்கம் (Short History of India) என்ற நூலிலும், பி. தி. சீனிவாச (ஐயங்கார்) எழுதிய ஆரியர்க்கு முந்திய தமிழ நாகரிகம் (Pre-Aryan Tamil culture) என்ற நூலிலும், சமய குரவர் ஏராசு எழுதிய கீழை மொழி ஆராய்ச்சிக் குறிப்புகளிலும், எச். சி. வெல்சு எழுதிய வரலாற்றுக் குறிப்புகளிலும் இன்னும் இந்திய நாகரிகத்தில் திராவிடரின் கூறுபாடுகள் (Dravidian elements in Indian culture), நாகரிகச் சிற்பிகள் (The makers of civilization) போன்ற பல நூல்களிலும் தெளிவாக்கப்பட்டுள்ளன.] இருப்பினும் பழைய சமசுக்கிருத நூல்களிலும் மெய்யறிவு உண்மைகள் ஒரு சில உள்ளன என்பதும் மறுத்தற்கில்லை. அதனால் அவற்றைப் படிப்பதாலேயே மாந்தர் உள்ளொளி பெறுவர் என்பதும், மாந்தர் தேவ நிலைக்கு உயர்த்தப் பெறுவர் என்பதும் அளக்கவொண்ணா ஆரியப் புரட்டு. இப்புரட்டில் திரு. முத்தையனும் உருட்டப் பெற்று, அவர் பெற்ற மதிமயக்கம் மாணவர்களுக்கும் புகட்டப் பெறுவதை நாம் வெறுக்காமலும் கண்டிக்காமலும் இருத்தல் முடியாது. அரசியல் சார்பில் முன்னாள் முதலமைச்சர் திரு பக்தவத்சலம் எவ்வாறு ஆரிய அடிவருடியாகச் சிறந்து விளங்கினாரோ, அவ்வாறே கல்வித் துறையில் திரு. முத்தையனும் முதல்தர ஆரிய அடிமையாகவே சிறந்து விளங்குகின்றார்.

'சமசுக்கிருதம் படிப்பதால் நாம் நம்மைத் தேவர்களின் நிலைக்கு உயர்த்திக் கொள்ளலாம்' என்று இவர் கூறியிருப்பது இவர் பொறியியல் கல்லூரியில் அமர்ந்திருக்கவே தகுதியற்றவர் என்பதையும், எங்கேனும் கோயில் குளப் படிக்கட்டுகளில் உட்கார்ந்துகொண்டு பாரதப் பழங்கதை சொல்லிக் காலக் கொலை செய்து கொண்டிருக்க வேண்டியவர் என்பதையும் தெளிவாக உணர்த்துகின்றது. தேவர் என்ற சொல்லின் ஆராய்ச்சியும், நுண்பொருளும் திரு. முத்தையன் மூளைக்கே புதியதான ஒரு புரட்சிக் கண்டு பிடிப்பன்று; அல்லது அல்

லலும் அயர்வும் நிறைந்த மாந்த இனத்துக்கு உய்வளிக்கும் பேரின்பப் பெருந்துறைக்கு நம்மை இட்டுச் செல்லும் ஒரு புதிய வழியும் அன்று. இவர் அவ்வாறு தம்மைக் கருதிக்கொண்டு எழுதியிருக்கும், "இளக்க ஒருங்கிணை கொள்கை" (A Unified new theory of Flexure) என்ற நூலின் பருத்த கொள்கை இவரின் செறித்த ஆற்றலைப் புலப்படுத்துவதுமன்று. (அந்நூலைப்பற்றிய முழு ஆய்வும் தென்மொழியில் விரிவாக வெளிவரும்.) மொத்தத்தில் தமக்கிருக்கும் சமசுக்கிருத அறிவை இத்தகைய புதுப் புரளிகளை விடுவதன் வழி ஆரியப் பார்ப்பனர்க்குக் காட்டிக் கொள்வதும், அவர்வழி, தாம் ஒரு 'தேவர்' ஆக முயல்வதுமே இவர் உட்கிடையாக விருக்கலாம். அதன் விளைவு கைமேல் இவருக்குக் கிடைத்தது, இவரை மேலும் இத்துறைகளில் ஈடுபடுத்திக் கொள்ளும் உரத்தைக் கொடுத்துள்ளது.

வேதகாலச் சமசுக்கிருத முனிவர்கள் முதற்கொண்டு இற்றை மெய்யறிவுக் கொள்கையில் ஒரு தனியிடம் பெற்றிருக்கும் இராதாக் கிருட்டிணன் வரை, எவர்க்கும் புலப்படாத அறிவியற் கொள்கை, பொறியியற் புளுகு திருவாளர். முத்தையனின் மூளைக்கே முதன் முதலிற் புலப்பட்டது போலும்! என்னே இவர் திறன்! அதனாலன்றோ தொழிலமைச்சர் திரு. வேங்கடராமன் முதல் கணக்கியல் நெறியாளர் திரு. அல்லாடி இராமகிருட்டிணன், முன்னால் உயர்நிலை மன்ற நடுவர் திரு. தி. எல். வேங்கடராம ஐயர் வரை அனைத்துப் புள்ளிகளும் இவரைப் பாராட்டி இவர் முதுகைத் தட்டிக் கொடுத்து, ஊக்கியிருக்கின்றனர். இவர்களைத் தவிர ஆனந்தவிகடன், இந்து நாளிதழ் வழிவழிகளும் இவரை வானளாவப் புகழ்ந்து பாராட்டியிருக்கின்றன. வேதகாலத்து ஆரியர்கள் தங்களை எதிர்த்த திரவிடத் தமிழ் அரசர்களைக் கொல்லுதல் வேண்டித் தாம் வழிபட்ட இந்திரன், வாரணன் முதலிய தெய்வங்கள் அவர்களின் விருப்பப்படியே தமிழரசர்களை அழித்த பொழுது அத்தெய்வங்களை மகிழ வைக்க அவர்கள் எப்படிப் பாடிப் புகழ்ந்து பராவினார்களோ, அப்படியே முத்தையன் பாராட்டப் பெற்றுள்ளார். இப்பாராட்டுரை முத்தையனை எப்படிக் குளிர்வித்ததோ, அப்படியே அவர் போன்ற ஆரிய அடிமைகளைக் குளிர்விக்கலாம். அதைப் பற்றி யெல்லாம் நமக்கொன்றும் இழப்பில்லை; ஊதியமும் இல்லை. ஆனால் அவர் கூறியுள்ள கருத்துகள்தாம் நமக்கு வியப்பை அளிக்கின்றன. ஆரிய மதிமயக்கத்தில் நின்று முத்தையன் கூறுவதைக் கேளுங்கள்: " சொற்பிறப்பியலின்படி 'சமசுக்கிருதம்" என்ற சொல் ஒற்றுமையில் அமைக்கப்பட்ட மொழி" என்று பொருள்படும். இச்

சொல் 'காரணத்தை'யும் (சம்) அதன் 'கருமத்தையும்' (கிருதம்) அவற்றின் 'இரண்டன்மை'யையும் (சு) (Non - difference) குறிக்கின்றது. சுருங்கக் கூறின் 'சமசுக்கிருதம்' என்ற சொல் ஒரு துறையில் 'சரியான' அறிவைப் பெறும் நெறியியலை (Methodology) முழுமையாகக் குறிக்கின்றது. இம்மொழி ஒரு பல்கலைக் கழகத்தின் செயலொடு ஒத்திருக்கின்றது. (The function of a University [Units - oneness - sam; versus - to turn - Krit] is identical with that of Sanskrit Language; its acade- -mic activities should be reflected in the realisation of 'One ness' in every branch of study)"

முத்தையனின் இக்கருத்து எவ்வளவு துணிவுடனும் பக்கத்துணையுடனும் வெளியிடப் பெற்றுள்ளது பார்த்தீர்களா? இன்னும் அவர் கூறுவதைக் கேளுங்கள்: 'தமிழ்' நம் 'தம்' என்ற தன்மையை 'இழ'க்கக் கூறுகின்றது. (தம் + இழ்); ஆனால் சமசுக்கிருதம் 'உலகு' 'மாந்தன்' 'புலம்பன்' (ஆன்மா) இவை எல்லாவற்றையும் ஒன்றுகவே (சம்) உணர உதவுகின்றது. ஆகவே, சமசுக்கிருதக் கல்வியால் நாம் அளவிடற்கரிய பயனைப் பெறலாம்.'

எப்படி? முத்தையனின் சமசுக்கிருத ஆராய்ச்சி இதுநாள் வரை சொல்லப்படாத புதிய கண்டுபிடிப்பு. துணிவான கூற்று. எனவே தான் "திரு.முத்தையனைப் போன்ற துணிவு அறிவியலறிஞர்களுக்கு இருத்தல் வேண்டும்" என்று திரு. ஆர். வேங்கடராமன் கூறியுள்ளார். 'தமிழ்' நாம் நம்மை இழந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையை நமக்கு உணர்த்துகின்றதாம். சமசுக்சிருதம் நம்மை இறைவனேடு பொருத்த உதவுகின்றதாம். எங்கே? நம் கலைஞர்களையும், வேள்களையும், காவலர்களையும், அறிஞர்களையும், பண்டாரகர்களையும் காணேம்? அவர்களின் தருக்கு மிகுந்த பட்டங்களும் செருக்கு மிகுந்த பதவிகளும் எங்கே? அவர்தம் ஆரவார அதிகாரக் குரல்கள் எங்கே? தமிழ்க்குடியில் பிறந்த எல்லார்க்குமே மானம் என்பது கடைச்சரக்காகி விட்டதா? அல்லது 'இலெமூரியா' பெருநிலம்போல் கடலுள் அன்றே மூழ்கிப் போயிற்று? பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் வெள்ளிப் பணங்களை எண்ணிக் கொண்டு போய்விடுவதிலேயே தம்தம் க(டை)டமைகள் முடிந்து போய்விட்டன என்று கருதிக்கொண்டுள்ளனரா? இல்லை, முத்தையனும் வேங்கடராமனும் போன்றவர்கள் தாம் தட்டிக்கேட்க ஒருவருமிலர் என்று கருதிக்கொண்டனரா?

சமசுக்கிருதத்திற்கு முத்தையன் செய்த சொல்லாராய்ச்சியும், மெய்ப்(!)பொருளும் போலத் தமிழ் மொழியில் கடலன்ன பரந்துள்ளன. இதில் உள்ள 'உண்மை'க்கும், 'அறிவு'க்கும் அதில் உள்ள 'சத்யமு'ம், 'புத்தி'யும் ஈடாகா. இதில் உள்ள 'பிறப்புக்கும்' 'இறப்புக்கும்' அதில் உள்ள 'ஜனனமும்' 'மரணமும்' எதிர் நில்லா. முத்தையனைப் போன்ற முப்பதினாயிரம் முத்தையன்கள் வந்தாலும் தமிழ் மொழியின்கண் நின்று சுடர் விடும் மெய்ப்பொருளையும் உள்ளொளியையும் அளக்கவும் முடியாது; இருளாக்கியும் விட முடியாது. மெய்ப்பொருள் கூறியும் அறிவியல் துணைகொண்டும் முத்தையன் போன்றார் அளக்கும் அளப்புகள் தமிழ் மொழியின் அழியாத் தன்மை என்ற அழல் முன் சருகும் சாம்பலுமாகும் என்பது நிலை நிறுத்தப்பெற்ற உண்மை.

விசும்பளாவிய மெய்த்தோற்றங்கள் யாவும் தமிழ் மொழியின் கண் எடுத்து விளக்கப்பட்ட விண்மீன்கள் போல் சுடர்விட்டு ஒளிர்ந்து கொண்டுள்ளன. தமிழ் மொழியில் உள்ள ஒவ்வோர் எழுத்தும் மெய்ப் பொருள் கொண்டு அறிவியலை வெளிப்படுத்தும் உண்மை உருவாகும்.

காணப் பட்ட உருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப் படுவது உருவெழுத் தாகும்

—யாப்பருங்கல விருத்தியுரை.

என்பது தமிழ் எழுத்துகளைப் பற்றிக் கூறப்பெறும் உண்மையுரை. தமிழுக்கு மூலமாகிய பகுதிச்சொல் 'தாமம்' என்பதும் 'விகுதி'ச்சொல் 'எல்' என்பதும் அறிஞர் கண்ட உண்மை.

தாமம் - என்பது ஞாயிறு - இறைவன் - தீ வடிவினன் என்று பொருள் படுவதும் 'எல்' என்பது ஒளி - சுடர் என்று பொருள்படுவதும் ஆக மெய்யறிவினர் கூறுவர். தாமம் + எல் தாமெல் — தமிழ் என்று குறுகி நிற்பதாகவும் தமிழ் என்பதற்கு 'இறைவனின் ஒளி' என்று பொருள் என்றும் புறப்புலனறுத்து அகப்புலன் விளங்கிய அறிவோர் கூறுவர். ஆனால் இவ்வடிப்படை உண்மைகளைக் கூறி, முத்தையனின் முழுமையற்ற தன்மையை நாம் ஆய விரும்பவில்லை. அத்தகைய அடிப்படை ஆய்வுக்கும் முத்தையன் இடம்வைக்கவில்லை. ஆரியர்தம் கைப் பாவையாக ஆடிக் கொண்டிருக்கும் வையாபுரியாரின் பிறங்கடையான திரு. முத்தையனுக்கு நாம் சொல்லிக் கொள்ள விரும்புபவை இவை : பொறியியற் கல்வி சமசுக்கிருத பாட

சாலேயோ, 'வேத' பாடசாலேயோ அன்று. அங்குப்போய் உங்கள் சமசுக்கிருத ஆராய்ச்சிகளேச் செய்து கொண்டிருக்க வேண்டியதில்லே அரசினரிடம் பெறும் கூலியை ஆரிய வேத வளர்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்வதைத் தமிழ் மக்கள் ஏற்கார். 'உங்கள் அறிவுத் திறனே'த்தூக்கி மூட்டை கட்டி வையுங்கள். ஒழுங்காகப் பொறியி யற்கல்வியில் உங்கள் 'கரும' அறிவைப் பயன்படுத்துங்கள்; 'காரண' அறிவு மாணவர்களுக்குத் தானே விளங்கும். இல்லெனின் உங்கள் சமசுக்கிருத மொழியாராய்ச்சியின் முடிவுகளே அரசினர் பாராட்ட முன்வந்தாலும், தமிழர் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார் என்று எச்சரிக்கின்றோம்.

"சுள்ளென் றெரிக்கும் சுடரோன்பால் தோன்றியுயிர்
உள்ளந் துலக்கி உலாவலின் — தெள்ளுபுகழ்ப்
பண்டைப் பெரியோர் பைந்தமிழை ஒண்டமிழ்
ஒண்டமிழ் என்மனர் போந்து." —பழம்பாடல்.

—பெருஞ்சித்திரன்

திரவிட ஆரியப் பரிமாற்றம் !

இன்று பிராமணர் சமசுக்கிருதத்தினும் ஆங்கிலத்தில் மிகுந்த புலமையுடையவர்களாக இருக்கின்றனர். வேதங்களேவிடச் சேக்சு பிரியர் நூல்கள் அவர்களுக்கு நன்கு தெரியும். தமிழ் நாட்டுப் பிரா மணர்க்குத் தமிழைவிட ஆங்கிலமே நன்கு தெரியும். ஆங்கிலத் தையே அவர் தம் சொந்த மொழி போல் பழக்கிக் கொண்டனர். சமசுக்கிருதத்தில் மந்திர ஆற்றல் முதலிய தெய்வத்தன்மை இருப்ப தாகவும், அது புனிதமான ஒரு குலத்தினர்க்கு மட்டும் உரியதெனவும் கூறிக்கொண்டார்கள். இஃது அதிகாரத்தையும் வலிவையும் தேடிக் கொள்வதற்குரிய தந்திரமாகும். பிராமணர் இவ்வாறு சிறிது சிறி தாகத் தமிழில் சமசுக்கிருதத்தைப் புகுத்தலாயினர். ஆனுல் திரவிடர் அதனே அவாவுடன் ஏற்றுக் கொள்ளவில்லே. இந்நிலே தொடக்கத் தில் சென்னே மாநிலத்தில் ஆங்கிலேயர் ஆங்கிலத்தைப் பரப்பியது போலாகும். தமிழர் இவ்வாறு மொழியளவில் ஆரியமாக்கப்பட்டு வருகையில், ஆரியர் பண்பாட்டு முறையில் தமிழர் ஆக்கப்பட்டனர்.

— இந்திய நாகரிகத்தில் திரவிடரின் கூறுபாடுகள். பக்கம் 64:
(Dravidian elements in Indian culture. Page 64)

பெரியாரின் தமிழ் ஆராய்ச்சி !

கடந்த மாதம் 16-ஆம் பக்கல் அன்று ' விடுதலை 'யில் 'தமிழ்' என்ற தலைப்பில் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் எழுதிய கட்டுரை கண்டு மிகவும் வருந்தினேம். அண்மையில் நடந்த தேர்தலில் தம் மண்டையில் விழுந்த அடியால் பெரியார் மூளை குழம்பிப் பிதற்றி யுள்ளதாகவே நம்மைக் கருதச் செய்தது அக்கட்டுரை. அவர் சிற்சில வேளைகளில் எழுதும் அல்லது கூறும் இத்தகைய கருத்துகள் தமிழ் மக்களுக்கிடையில் அவருக்குள்ள மதிப்பை அவர் கெடுத்துக்கொள்ளத் தான் பயன்பட்டிருக்கின்றனவே அன்றி, அவர் உறுதியாகக் கடைப் பிடித்து வரும் பொதுமைக் கொள்கையை வளர்த்துள்ளதாகத் தெரிய வில்லை. கடந்த சில ஆண்டுகளாகவே அவர் எல்லாருடைய வெறுப் புக்கும் கசப்புக்கும் ஆளாகி வருவதற்கும், அவருக்குத் துணையாக நின்று பணியாற்றிய பலரும் விலகிப்போய்க் கொண்டிருப்பதற்கும் அவரின் இத்தகைய மூளைக்குழப்பமான கருத்துகளை அவ்வப்பொழுது அவிழ்த்துவிட்டுக் கொண்டிருப்பதுதான் பெருங் காரணம். இந்தத் தேர்தலில் காமராசர் ஒருவர்க்காகத், தாம் மனமார ஆரிய அடிமை, பொதுநலப் பகைவன் என்று கருதிய பக்தவத்சலம் போன்றவர்களைக் கூட கைதூக்கிவிட எப்படித் தம் மானத்தையும் பகுத்தறிவையும் அடகு வைத்துப் பேசிக்கொண்டு திரிந்தாரோ, அப்படியே இது போன்ற கருத்துகளை முன்பின் விளைவுகளை எண்ணிப்பாராமல் வெளிப் படுத்துவதும் அவர் இயல்பு. ஆனல் அவர்போன்று இல்லாமல் நாம் எந்நிலையிலும் அஞ்சாமை, அறிவுடைமை நேர்மை இவற்றின் அடிப் படையில் உண்மையை உண்மை என்றும், பொய்மையைப் பொய்யென்றும் துணிந்து கூறிவருவதால் அவரைப் பற்றிய சிலவற்றையும் நாம் ஈண்டுக் கூற நேர்ந்தமைக்காக மிகவும் வருந்து கின்றேம். அவரைப்போல் இரங்கத்தக்க நிலையில் இருந்து கொண்டு நாம் இதைக் கூறவில்லை.

தமிழ் மொழியைப் பற்றிய பெரியாரின் கருத்தும் குமுகாயத் தொண்டைப்பற்றிப் பக்தவத்சலம் பேசும் கருத்தும் ஏறத்தாழ ஒன்று தான். பக்தவத்சலம் ஆரிய அடிமை. பெரியார் திராவிட அடிமை.

இன்னுஞ் சொன்னால் குமுகாய அமைப்பில் இராசாசியரால் எப்படித் தமிழர் இனம் அழிகின்றதாக இவர் கூறுகின்றாரோ, அப்படியே மொழியியல் துறையில் தமிழ்வளர்ச்சிக்கு இவர் ஓர் இராசாசியாகவே இருக்கின்றார்.

இவர்பற்றி 'திரு. வி. க.' அவர்கள் கூறியதாக ஒரு நிகழ்ச்சி சொல்லப்படுகிறது. ஒருகால் தமிழறிஞர் பா. வே. மாணிக்கம் (நாயக்கர்), திரு. வி. க. ஈ. வே. இரா. மூவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். அக்கால் திரு. வி. க. இவரிடம் "ஏன், ஐயா 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று கூறுகின்றீர்களே! அதை விட்டுத் 'தமிழ் நாடு தமிழருக்கே' என்று கூறினால் நாங்களும் உங்களோடு இணைந்துகொள்ளுவோமே" என்று கூறினாராம். அப்பொழுது பா. வே. மாணிக்க(நாயக்கர்) அவர்களும் திரு. வி. க. கருத்தே சரி என்று கூறினாராம். சிறிது நேரம் கழித்துத் திரு. வி. க. எழுந்து போய் மீண்டும் வந்தாராம். அவர் வருவதற்குள் ஈ. வே. இரா. பா.வே. மாணிக்க(நாயக்கர்) அவர்களிடம், ஏன் ஐயா, நீங்களும் அவரோடு சேர்ந்துகொண்டு 'தமிழ் நாடு தமிழருக்கே' என்று கூப்பாடு போடச் சொல்கிறீர்களே, அப்படியே தமிழ் நாடு கிடைத்தால் அதில் உங்களுக்கும் எனக்கும் எப்படி ஐயா இடமிருக்கும்? முதலில் நம்மையன்றோ தெலுங்கு நாட்டிற்கும் கன்னட நாட்டிற்கும் ஓடச் சொல்லுவார்கள். இது தெரியாமல் நீங்களும் பேசுகின்றீர்களே" என்று கூறினாராம். பா. வே. மாணிக்கம் அவர்கள் உண்மையான தமிழ்த் தொண்டரானதால் அதைப்பற்றி ஒன்றும் கருத்துக் கூறவில்லையாம்

இந்நிகழ்ச்சி தொடக்கத்தில் பெரியாரின் உட்கோள் எவ்வாறு இருந்தது என்பதற்கோர் எடுத்துக்காட்டு இதனை இங்கு ஏன் வெளிப்படுத்தினோம் எனில் பெரியார்க்குத் தமிழ்பற்றிய எண்ணமும் தமிழரைப்பற்றிய எண்ணமும் எந்த அளவில் இருந்தது, இருக்கின்றது என்பதைப் புலப்படுத்தவே ஆகும். ஆனால் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை இப்பொழுது இவரும் வற்புறுத்துவதில்லை. தமிழ்நாடு பிரியவேண்டும் என்பதுதான் இப்பொழுது இவர் கொள்கையாக இருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தினராவது திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட்டதாக வெளிப்படையாகவே அறிவித்துவிட்டனர். ஆனால் இவரோ தம் திராவிட நாட்டுக் கொள்கையை மக்கள் உணராதவாறு சிறிது சிறிதாகப்

பேச்சிலும் எழுத்திலும் கைநழுவ விட்டதுடன் தமிழ் நாட்டுப் பிரிவினைக் கொள்கையைச் சிறிது சிறிதாகக் கைக்கொண்டும் விட்டார். இவர்தம் நாளிதழான 'விடுதலை'யில் முன்பெல்லாம் தலைமுகத்துப் பொறித்து வந்த 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற வேண்டுரை இப்பொழுது எடுபட்டுப்போய்விட்டது. இவரைப் பின்பற்றும் அன்பர்களும் காலத்திற்குக் காலம் மாறுபட்டவர்கள் ஆகையால், அது பற்றி ஒருவரும் கவலைப்பட்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை.

இவர் அரசியல் வீழ்ச்சி இப்படியாக முடிந்துவிட்டாலும் குமுகாயப் போராட்டத்தில் இவர் நல்ல வெற்றி கண்டுள்ளார். தூங்கிக் கொண்டிருந்த தமிழர்களைத் தட்டியெழுப்பித் தன்மான உணர்வை ஊட்டிய இவர் தொண்டிற்குத் தமிழர்கள் என்றும் கடமைப் பட்டவர்கள். இத்துறையில் இவர் கண்ட வெற்றியே தமிழ்த்துறையிலும் இவரை இப்படிப் பேசச் செய்திருக்கின்றது. ஈ. வே. இரா. தமிழர்களின் தன்மான உணர்விற்கும் பகுத்தறிவு வளர்ச்சிக்கும் பாடுபட்ட வகையில் போற்றப்படவேண்டியவர்; புகழப்படவேண்டியவர்; ஆனால் தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் இவர் அதன் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவே இருந்திருக்கின்றார். ஆரியப் பார்ப்பனர்களின் தில்லு மல்லுகளையும், அவரால் தமிழுக்கு நேர்ந்த-நேரவிருக்கின்ற கேடுகளையும் புடைத்துத் தூற்றி எடுத்துக் காண்பிக்கும் மதுகை படைத்த இவர், ஆரிய மொழியால் தமிழ் மொழிக்குக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக நேர்ந்த தீங்கை ஒப்புக்கொள்வதில்லை; ஒரோவொருகால் ஒப்புக்கொண்டாலும் அதை விலக்க எவ்வகை முயற்சியும் செய்வதில்லை; ஒரோவொருகால் செய்தாலும் அதைக் கடனுக்காகவே, அவருடன் சேர்ந்திருந்த உண்மைத் தமிழன்பர் தம் கண்துடைப்புக்காகவே செய்திருக்கின்றார்.

பாவாணர் ஒருகால் தாம் எழுதிய ஓர் அரிய ஆராய்ச்சி நூலை அச்சிட இவர் உதவி கேட்டார். இவரோ "பண உதவி ஏதும் செய்ய முடியாது; வேண்டுமானால் அதை எப்படியாகிலும் அச்சிட்டுக்கொண்டு வாருங்கள்; நான் விற்றுத் தருகின்றேன்." என்று கூறினாராம். பாவாணர் அவர்களும் அதை மெய்யென்று நம்பி, தம் துணைவியார் கழுத்தில் கிடந்த பொன்தொடரியை விற்று அதை அச்சிட்டுக்கொண்டு போய், விற்றுக்கொடுக்கக் கேட்டாராம். பெரியார் இரண்டு மூன்று உருபா மதிக்கப்பெறும் அந்நூலை நான்கணா மேனி விலைக்குக் கேட்டாராம். இதுபோன்ற நிகழ்ச்சிகள் நிறைய உள.

பகுத்தறிவுக் கொவ்வாத பழங்கொள்கைகளைப் பேசித் திரியும் பத்தாம் பசலித் தமிழ்ப் புலவர்களை வேண்டுமானால் இவர் வெறுக்கலாம். அவர்களை நாமும் பாராட்டுவதில்லை. அவர்களால் தமிழ் மொழிக்கு என்றும் கேடுதான். ஆனால் தமிழ்ப்பற்றும், தமிழ் நாட்டுப் பற்றும் தமிழர் முன்னேற்றமுமே தலையாகக் கொண்ட மறைமலை அடிகள், திரு. வி. க., பாவாணர் போன்ற மெய்த்தொண்டர்களுக்கும் பேரறிஞர்களுக்கும், இவர் தம் பகுத்தறிவுக் கொள்கைகளையே ஆயிரக் கணக்கான தமிழ்ப் பாடல்களாக வடித்தெடுத்த பாவேந்தர் பாரதி தாசன் அவர்களுக்கும் இவர் உதவாதிருந்த காரணமென்ன? உ.வே.சா. நா. கதிரைவேல் போன்றவர்களை இவர் மதிக்காமற் போனாலும் பாவாணர், பாரதிதாசன், இலக்குவனார் போன்றவர்களைக் கண்ணெடுத்தும் இவர் பார்க்காமல் போனதற்கும் அந்தத் தமிழ்தான் காரணமோ? ஆம்; தமிழ்தான் காரணம் என்றால் அந்தத் தமிழ் மொழியைத் தம் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்கள் பல் மட்டும் எப்படி முழுக்கருத்துக்கொண்டு இவர் தொண்டாற்றிவிட முடியும்? உ. வே. சா, இவரைப் 'பிரபு'வாக மதிக்கவில்லை என்று இவருக்குத் தமிழைப் பிடிக்காமற் போனால், இவரைத் தம் தெய்வமாகக் கருதிய பாவேந்தருக்காக, தமிழ்மொழி மேல் இவருக்கு ஆராக் காதலன்றோ ஏற்பட்டிருக்க வேண்டும்? பாவாணர், பாரதிதாசன் போன்றவர்களையும் இவர் கண்ட சேசாசலம், முத்துச்சாமி, சங்கரதாசு, கதிரைவேல் போன்றவர்களாகவே கருதிக் கொண்டாரோ? இல்லை, தாம் என்ன என்னவற்றை அறிந்திருக்கின்றாரோ அல்லது தமக்கு எவை எவை புரிகின்றனவோ அவையவை மட்டுந்தாம் அறிவுக்குப் பொருந்தியவை; சிறந்தவை; உலகமெல்லாம் பின்பற்றத் தக்கவை என்று கருதிக் கொண்டாரோ?

தமிழில் என்ன இருக்கின்றது? என்று இவர் கேட்கும் வெறுப்புக் கொள்கை (Cynicism) தான் இவர்காணும் பகுத்தறிவு என்றால் அப் பகுத்தறிவு நமக்கு வேண்டுவதில்லை. உலகில் உள்ள மாந்த மீமிசைச் (Supernal) கொள்கைக்கு வழிகாட்டாத இவர் குமுகாய அமைப்பு நமக்குத் தேவையில்லை. தமிழிலும் அதில் உள்ள மேலான உளவாழ்விற்கு அடிகோலும் நூல்களிலும் இவர் எதை எதைத் தேடுகின்றாரோ? நமக்குத் தெரியவில்லை. ஆரிய அடிமைப் புலவர்கள் சிலர் இடைக் காலத்தில் ஆக்கிவைத்த கம்ப இராமாயணம், பெரிய புராணம், வில்லி பாரதம் முதலிய பார்ப்பன அடிமைப் பழங்கதை நூல்களே தமிழ்

என்று நினைத்தால் தமிழ்மொழியில் மாந்தவாழ்விற்கான இலக்கியநூல் களே இல்லை என்பதை நாமும் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் இப் பொழுதுள்ள கழக நூற்களையும், இறந்துபட்ட ஆயிரக்கணக்கான மெய்யிலக்கியங்களையும் கண்டும், கேட்டும், உணர்ந்தும்கூட இவர் தமிழைப் பழிப்பதை நம்மால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வேண்டுமானால் தமிழ் மொழியில் என்னென்ன இல்லை என்று இவர் கூறட்டும்; அதன்பின் நாம் என்னென்ன இருக்கின்றது என்று காட்டு வோம். அதை விட்டு விட்டுத் தமிழ்ப் புலவர்களில் உருசிய நாட்டின் இலெனினையும்; மார்க்சையும்; கிரேக்க நாட்டின் சாக்ரடீசையும் எப்படி இவர் தேடிக் கண்டுபிடிக்க முடியும்? வேண்டுமானால் தொல்காப்பி யரைப்போல், வள்ளுவரைப் போல், திருமூலரைப்போல் உலகில் உள்ள நாடுகளில் எந்தெந்த நாடுகளில் உள்ளனர் என்று இவர் காட்டட்டும்! நாமும் இவர் கூறும் — இவர் விரும்பத்தக்க இவர் மதிக்கத்தக்க அறிஞர்களையும், பெரியோர்களையும் தமிழிலும் காட்டுவோம்.

பொதுமக்களின் அறியாமைகளை இவர் நன்கு உணர்ந்தவர் என்ப தாலேயே, அறிஞர்களின் அறிவை இவர் நன்கு உணர்ந்தவர் ஆகி விடார். இவரின் கடவுள் வெறுப்புக் கொள்கை இந்நாட்டுச் சூழலில் இவர் கூறும் சீர்திருத்தத்திற்குச் சிறு அளவிலோ, பேரளவிலோ ஒரு வாறு பொருந்துவதாகலாம். ஆனால் அதுவே மாந்தர்க்கு வேண்டிய நிறைவான கொள்கையாகிவிடாது. குமுகாயக் குப்பைக் குழிகளில் இவர் எண்ணத்திற்கும் கருத்திற்கும் சொற்களுக்கும் வேண்டிய தீனி நிறையஉண்டு. அதனாலேயே அறிவுக்கருவூலம் இவருக்குத் திறந்த கத வாகிவிடாது. ஆரியப் பார்ப்பனரின் கலவைக் கொள்கைகளுக்கு இவர் பெரியதொரு சமட்டியாகலாம். அதனாலேயே தமிழர்களின் உள வளர்ச்சிக்கும் மீமிசை மாந்த எழுச்சிக்கும் இவர் ஏணியாகிவிடமுடி யாது. இவர் சீர்திருத்தம் பாராட்டக் கூடியது; பொதுமைக் கருத்து வரவேற்கக் கூடியது; துணிவு வியக்கக் கூடியது; முயற்சி போற்றக் கூடியது; அதனாலேயே இவருடைய அறிவும் பின்பற்றத்தக்கதாகி விடாது. முட்செடிகளை அகற்றி மலர்ச்செடிகளை வளர்க்கப் பாடுபடும் ஒருவன் நல்ல தோட்டக்காரனாகலாம். அதனால் அவன் அந்த மலர்ச் செடிகளையே படைத்தவன் ஆகிவிட முடியாது. அதில் மலரும் மலர் களுக்குக் கட்டளையிடவும் முடியாது. இவருடைய சீர்திருத்தத்தை— முயற்சியை — தொண்டைக் கொண்டு — மக்கள் இவரைப் பாராட்டு வதைக் கண்டு, அம்மக்கள் எல்லாரும் தம்மையே மீமிசை மாந்தனாகக்

கருதிக் கொண்டுள்ளனர் என்று இவர் தவருக எண்ணிக்கொண் டார் போலும்; அப்படி எண்ணி இவருக்குத் தொடர்பில்லாத செய்தி களில்—மெய்யறிவுணர்வுகளில் இவர் கருத்தறிவிப்பது இவர் பேதைத் தன்மையையே காட்டும்.

தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள புகுத்தப்பட்டுள்ள இடைக் காலக் கருத்துகளைப்பற்றி ஆராய்ந்து, அக்கருத்துகள் யாவும் பிறரால் இம்மொழி பேசிய மக்களை ஏமாற்றுவதன் பொருட்டு எழுதி வைக்கப் பட்டதாகும் என்று தெரிந்த இவர், அப் பாழ்வினைக்குத் தமிழ் மொழி மேல் குற்றங்கூறுவது எப்படிச் சரியாகும்? தமிழ் மக்களுக்கு ஒவ் வாத கருத்துகளை ஒதுக்கப் புகுந்த இவர் அக்கருத்துகளோடு தமிழர் களுக்கே உயிராகவிருந்த ஒழுகலாறு, மெய்யுணர்வு, உளத்தூய்மை முதலிய உயர்ந்த கொள்கைகளின் உள்ளுக்கங்களையும் ஒரேயடியாகத் துடைத்தெடுக்க முற்பட்டுவிட்டார். ஆரியக் கடவுள் கொள்கைகளைச் சாடவந்த இவர் தமிழரின் ஒருதெய்வக் கொள்கையையும் கண்டிக்க - கண்மூடித்தனமாக இவர் செய்த முயற்சி, - ஆரிய அழுக்கை ஒருவாறு அகற்றியதேனும், தமிழரின் உயர்ந்த பண்பாட்டையுமன்றோ சிதைத் தெறிந்துவிட்டது. இற்றைத் தமிழகத்தில் நிலவியிருக்கும் பண்பாட் டுத் தாழ்வுக்கு இவரும் இவர் மட்டையடிச் செய்கைகளும் கூட ஓரளவு காரணம் என்று கூறலாம். பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல் தமிழகத்தில் வந்து கலந்த ஆரியரின் பல தெய்வக் கொள்கையை ஒழிக்கப் பாடுபட்டுப் பேய்த் தன்மையை வளர்க்கவே பயன்பட்டது இவரியக்கம் எனினும் மிகையில்லை. இவ்வளவு அரும் பாடு பட்டும் இவர் எதிர்த்துப் போராடுகின்ற பார்ப்பனரின் ஊடுரு வலைத் தடுத்து நிறுத்தாமற் போனதற்கு, இவர் தமிழ்மேலும் தமிழ்ப் பண்பாட்டு மேலும் முழு நம்பிக்கை வைக்காமையே காரணம். எய்த வன் இருக்க அம்பை நோகும் இவர் செய்கைக்கு நாம் மிகவும் வருந்துகின்றோம்.

தமிழில் இதுவரை நல்ல நூல்கள் வெளிவரவில்லை என்று பழி சுமத்தும் இவர், இவ்வுலகில் உள்ள எந்த மொழியில் வெளிவந்த எந்த நூல்தான் எந்தப் பகுதி மக்களுக்கு என்னென்ன நன்மை செய்தது என்று கூறுதற்கியலுமா? உலகில் உள்ள நூல்கள் பலவகைப்பட் டன. ஒரு தோட்டத்தில் உள்ள மலர்களைப் போல பல்வகை மணங் களும் நிறங்களும் கொண்டன. அதில் மல்லிகை மலருக்கு, முளரி (ரோசா) மலரைப் போல் வண்ணமில்லையே என்றும், மகிழ மலர்

போல் மணமில்லையே என்றும் கூறிக்கொண்டிருப்பது பேதைத் தனமேயன்றி மலரில் உள்ள குறைபாடு ஆகாது. தமிழ் மொழியில் உள்ள திருக்குறளைப் போன்றதோர் அறநூலும் சிலப்பதிகாரம் போன்றதோர் இசை நூலும், புறநானூறு போன்றதொரு மற(வீர)நூலும், மணிமேகலை பெருங்கதை போன்றதொரு துறவு நூலும், அகநானூறு குறுந்தொகை போன்றதொரு காதல் நூலும், திருமந்திரம் போன்றதொரு மெய்யறிவு நூலும், திருவாசகம் போன்றதொரு வழிபாட்டு நூலும் உலகில் வேறெந்த நாட்டிலும் வேறெந்த மொழியிலும் வேறெந்த மக்களிடையேயும் காண்பது அரிது என்பது நூற்றுக் கணக்கான மேனாட்டுப் பல்துறை அறிஞர்கள் எல்லாரும் ஒருமுகமாக ஒப்புக்கொண்ட பேருண்மையாகும். இவையன்றி இக்கால அறிவியல் வளர்ச்சிக்குப் பொருந்தும்படியான நூல்கள் எவை எனின், இக்காலத்துச் செய்முறை அறிவு நூலை அக்காலத்திலேயே எப்படி எழுதி வைத்திருக்க முடியும்? என்றாலும் நம் தமிழில் உள்ள நூல்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்ட ஒரு நிலையில் நாம் இத்தகைய கேள்வியை இரக்க உணர்வோடு கேட்கவேண்டுமே யன்றி, இழிவுணர்வோடு கேட்பதும், தமிழையே காட்டுமிராண்டிக் காலத்து மொழி, நாகரிக காலத்திறகுப் - பகுத்தறிவுக் காலத்திற்குப் பொருந்தாத மொழி என்று இழித்துரைப்பதும் ஈ. வே. இரா. வின் பேதைமையையே காட்டும். அவர் கருதும் காட்டுமிராண்டித்தனம் என்பது என்ன? நாகரிகம் என்பது எது? பகுத்தறிவு என்பது எது? என்பதைத் தெளிவாகக் கூறட்டும். நாம் அதன்பின் அத்தகைய காட்டுமிராண்டித்தனம் தமிழில் என்ன இருக்கின்றது என்று கேட்போம் அவர் கூறும் நாகரிகமும் பகுத்தறிவும் எந்த நூலில் இல்லை என்று சூளுரைத்துக் கேட்போம் ஆரியர்களின் சூழ்ச்சியால் இற்றைக் காலத்துள்ள தமிழ் மக்கள் பெரும்பாலாரிடம் தமிழ் மானத்தையும், தமிழ் அறத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும் எப்படிப் பார்க்க முடிவதில்லையோ, அப்படியே ஆரியரால் அழிக்கப்பட்டவை போக எஞ்சியுள்ள நூற்களிலும் நாம் முழுவதும் பாராட்டுகின்ற அளவிற்குத் தமிழ்த் தன்மைகளைப் பார்க்க முடியவில்லை என்பது உண்மையே! ஆனால் அதற்காகத் தமிழ் மொழியையே தாழ்த்திக் கூறுவது எப்படி அறிவுடைமையாகும்.

சீதையின் கற்பாராய்ச்சியையும் இராமனின் கோழைக் கண்டுபிடிப்பையும் ஆரியத் தெய்வங்களின் இழிநிலை ஆய்வுகளையும் செய்வ

தில் 'வல்லவர்' என்பதாலேயே, இவர் தமிழ்மொழி ஆராய்ச்சியையும் செய்வதில் வல்லவராகிவிடமாட்டார். கால்டுவேலரும், போப்பும், பெசுக்கியும், சார்லசு கோவரும், எலிசா ஊலும், சான்முர்தோக்கும், செசுப் பெர்சனும், கிரையர்சனும், பெரடெரிக் பின்காட்டும், கிரேயலும், எமினேவும், பரோவும், சேம்சு ஆலனும் மறைமலையடிகளும், திரு. வி. க. வும், பாவாணரும் தெரிந்துகொண்டவற்றைவிடப் பெரியார் ஈ. வெ. இரா. தமிழைப் பற்றி மிகுதியாகத் தெரிந்துகொண்டு விட்டார் என்று நாம் கருதிவிட வேண்டா. அவர் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. இரா. மட்டும்தான். உலக அறிவியல் கழகத்தின் தமிழ் ஆய்வியல் பேராசிரியர் பெரியார் அல்லர்; என்பதைத் தமிழன்பரும் பிறநம் உணர்ந்து கொள்வாராக. எனவே அவர் பட்ட (அநுபவ) அறிவில் கண்ட உண்மையே தமிழ் என்னும் காரண அறிவுக்கு முடிவாகிவிட முடியாது.

இவர் ஓர் அரசியல்காரர்; அல்லது குமுகாயச் சீர்திருத்தக்காரராக விருக்கலாம். ஆனால் ஒரு மொழிப் பேராசிரியராகவோ, வரலாற்றுப் பேராசிரியராகவோ, மக்களியல் பேராசிரியராகவோ, ஆகிவிட முடியாது. அவர் கூறியிருக்கின்ற தமிழைப் பற்றிய கருத்துகள் தம்மை ஒரு மொழிப் பேராசிரியராக எண்ணிக்கொண்டு கூறிய கருத்துகளாகும். எனவே அவை அறிவுக்குத் தொடர்பில்லாத கருத்துகளே என்று கருதி விடுக்கவும். எவரும் அதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இவர் அரசியலைப் பொறுத்தவரை ஓர் இலெனினாக இருக்கலாம்; குமுகாயவியலைப் பொறுத்த வரையில் ஒரு கமால் பாட்சாவாக இருக்கலாம்; பொருளியலைப் பொறுத்த வரையில் ஒரு மார்க்சாக இருக்கலாம். சீர்திருத்தத்தைப் பொறுத்தவரை ஒரு பெரியாராகவும் இருக்கலாம். ஆனால் மொழித்துறையைப் பொறுத்தவரையில் – இவர் வெறும் இராமசாமிதான். இவ்விருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்றார் என்பதற்காகவே வள்ளுவரைவிட, தொல்காப்பியரைவிட, திருமூலரைவிட, கபிலரைவிட, இளங்கோவைவிட முதிர்ந்த அறிவினர் ஆகிவிடார். இறைவன் உண்மையை மறுப்பதாலேயே இவர் முழுமையான அறிவாளராகிவிடமாட்டார்.

நெப்போலியன் ஒரு மறவன்; ஆனால் மனத்தூய்மையில் அவன் புத்தரைப்போல வழிபடத்தக்கவனல்லன். சாக்ரடீசு ஓர் அறிஞன்; ஆனால் அவன் இயேசுவைப் போல் பின்பற்றத் தக்கவனல்லன்; மார்க்சு

பொதுவுடைமைத் தந்தை; ஆனால் வள்ளுவரைப்போல் மெய்யுணர்வினன் அல்லன்; சீசர் தன்னிகரற்ற ஓர் அரசியல் தலைவன்; ஆனால் அவன் எமர்சனைப் போல் மீமிசை உணர்வு படைத்தவனல்லன்! இலெனின் ஒரு நாட்டுக்கே புத்துணர்வூட்டிய வழிகாட்டி; ஆனால் அவன் ஐன்சுடீன் போன்ற அறிவியலறிஞன் அல்லன். அவர்களைப் போலவே பெரியார் ஈ. வெ. இரா. ஒரு குமுகாயச் சீர்திருத்தக்காரர்; பகுத்தறிவு வழிகாட்டி; அவர் ஒரு பேராசிரியரோ அறிவியல் வல்லுநரோ அல்லர். தமிழரின் குமுகாய அமைப்பைச் சீர்திருத்தியவர் என்பதற்காகத் தமிழையே சீர்திருத்தத் தொடங்குவது அவர் அறியாமையாகும். அது நுனிக்கிளையில் அமர்ந்து அடிக்கிளையை வெட்டுவது போன்ற மடமைச் செயலாகும். பூச்சி அரித்த இலைகளையும், கிளைகளையும் கழிக்க முற்படுவதுடன் பரந்து வேரோடிய மரத்தையும் வெட்டிச் சிதைக்கும் ஓர் அடாத செயலாகும்.

அண்மையில் ஏப்பிரல் 22, 23, 24-ஆம் பக்கல்களில் இலண்டனில் சேக்சுபிரியர் பிறந்த நாளை அரசியல் பேரறிஞர்கள் உட்பட்ட எல்லாரும் கொண்டாடுவது, அவர் அறிவியல் அறிஞர், அல்லது நாட்டின் சீர்திருத்தக்காரர் அல்லது பகுத்தறிவு மேதை, அல்லது அந்த நாட்டின் தலைமை அமைச்சராக இருந்தவர் என்னும் காரணங்களுக்காகவா? அவர் ஒரு மொழிப்புலவர்; பாவலர் என்பதற்காகவே ஆகும். நம் நாட்டுப் பழம்பெரும் புலவர்கள் அவரைவிட எவ்வகையில் தாழ்ந்தவர்கள் என்பதைப் பெரியார் கூறட்டும். ஆரியர் சூழ்ச்சிகளால் இடைநாட்களில் ஏற்பட்ட சில்லறைப் புலவர்கள் 'புலவர்கள்' என்ற பெருமைக்குரியவர்களே அல்லர். எனவே அவர்களை நாம் பரிந்துரைக்கவும் இல்லை. இவர் மதிக்கின்ற மேலை நாடுகளில் அத்தகைய அளவுக்கு ஆண்டு தோறும் பெரும்புலவர்களுக்கு விழாவெடுத்துப் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். ஆனால் இங்கோ தமிழர்களுக்கு விடுதலை தேடித்தருகின்றேன் என்று கூறும் ஒரு தலைவர், தமிழைப் பற்றியும், உண்மைத் தமிழ்ப் புலவர்களைப் பற்றியும் தரக்குறைவாகப் பேசித் திரிகின்றார் என்றால், அஃது அவர்க்கு மட்டுமன்று; தமிழர் எல்லாருக்கும் வந்த இழிவாகும். தமிழ்நாட்டுக்கே வந்த இழிவு. இஃது அவர் எதிர்த்து வரும் ஆரிய இனத்துக்கு வேண்டுமானால் மகிழ்வூட்டுவதாக இருக்கலாம். உண்மைத் தமிழர்களுக்கு எள்ளளவும் மகிழ்ச்சி ஊட்டாது; மாறாக வெறுப்பையே ஊட்டும் என்று அவரும் அவரைச் சார்ந்தவர்களும் கருதிக் கொள்வார்களாக.

இவர், 'தமிழ் படிப்பதால் பயன் ஒன்றுமில்லை' என்ற தம் கருத்துக்கு வலிவாக, எவனோ சொத்தை சோம்பேறிப் பாவலன்(!) ஒருவன் கூட்டி வைத்த உமிப்பாட்டை எடுத்து வைத்துக்கொண்டு அதில் ஒன்றுமில்லையென்றுஊதிக்காட்டி அவனுடன் அவரும் அழுதிருப்பது அவர் அறிவுக்கு இழுக்கு என்பதை அவர் அறிந்துகொள்ள வேண்டும். பிறரை எப்படிக் கண்களை மூடிக்கொண்டு பின்பற்றக் கூடாது என்று இவர் கூறுகின்றாரோ, அப்படியே இவரையும் உண்மைத் தமிழர் கண்களை மூடிக்கொண்டு பின்பற்றக் கூடாது என்று எச்சரிக்கின்றோம். தப்பித் தவறித் தன்மானம் கெடாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழரையே, மெய்ம்மைத் தமிழையே தாழ்த்தும் இப்படிப்பட்ட கருத்துரைகளால், பெரியார் தமக்கிருக்கும் 'பெரிய' மதிப்பை இழந்துவிட வேண்டா என்று இவரைப் பல்லாற்றானும் கேட்டுக்கொள்கின்றோம்.

பெருஞ்சித்திரன்.

அச்சக அமைப்புத் திட்டம்

ஓர் அறிக்கை

தென்மொழியின் அச்சக அமைப்புத் திட்டம் விரைவில் முடித்துக் கொள்ளப்பெறும். நன்கொடை திரட்டிய அன்பர்களும், பிறவகையில் உதவும் அன்பர்களும் இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் தங்கள் தொகையினையும் குறிப்புகளையும் விடுத்து எங்களோடு ஒத்துழைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றோம்.

— அமைச்சர்.

அச்சக அமைப்புக்கு உங்கள் பங்கை உடனே செலுத்துங்கள்

இலக்கியம்

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்

பாட்டு: உ

உலகத் தீரே! உலகத் தீரே!
அலகில் பிறக்கத்துப் பல்லுயி ருள்ளும்
உள்ளஞ் சான்ற உலகத் தீரே!
நாம்வேட்டுப் பிறந்தன் றிலமே; பின்றலை
நாம்வேட் டிறந்தன்று மிலமே! ஊங்கு
வாழ்தல் ஞான்றும் வைகறை யுவப்போர்
மாலை யழுங்கலும் மாறுகொல் அன்றே;
புள்ளும் மாவும் எள்ளுவ மாயினும்
அவையினும் ஓம்புதல் இலமே! அலமர
வைகலுந் திணையும் உய்யலு மிலமே!
என்கொல் இலக்குநும் வாழ்வே; இலக்கத்து
என்கொல் ஔர்ந்ததும் அறிவே! வானோக்கி
எண்கூர் வாளி எய்பின் அன்ன
வறிதா கின்றே வாழ்க்கை;
அரிதா மாறே அழிவறிந் துயினே!

பாட்டு: 2. பொழிப்பு :

உலகத்தவரே! உலகத்தவரே! அளவற்ற பிறப்பாகிய பல்லாயிரங் கோடி உயிரினங்களுக்குள்ளே, எண்ணுதல், தெளிதல் தேர்தல் ஆகிய முத்திறனும் நிறைவாக, மேம்பட்டு நிற்கும் உள்ளம் பொருந்திய உலகத்தவரே!

நாம் இப்பிறப்பு வேண்டி அழுந்தி விரும்பிப் பிறந்தோம் அல்லோம்; அதுபோன்றே இப்பிறப்பின் எல்லையிலும் நாம் அழுந்தி

விரும்பி இவ்வுலக வாழ்வினைத் துறப்போம் அல்லோம்; இவ்விடைப் பட்ட காலத்து நமக்கு அமைந்த இவ் வாழ்க்கைப் பொழுதிலும், நாள் தொடக்கமாகிய இருள்நீங்கா முன்காலையில், வரும்பொழுதை எண்ணி அவாவி உள்ளங் களிப்பார், நாள் முடிவாகிய இருள்படி பின்பொழுதில், கடந்த அந்நாளைய நிகழ்வுகளை எண்ணி மிக வருந்துதலாகிய தொடர்ந்த போக்கிற்கு மாறுபாடு உறுவது இல்லை ஆக.

அப் படித்ததாய வாழ்வென் பொழுதிலும் பொந்தில் அடங் குவனவாகிய பறவையினங்களையும், புழையுள் ஒடுங்குவனவாகிய விலங்கினங்களையும், அவற்றின் உள்ளம் நிறைவுற வாயாத போக் கிற்கு இழித்து நினைப்போம் எனினும், தம் நிலையினின்று தாழ்ந்து போகாத அவை போன்ற முறையிலும், நாம் நமக்கமைந்த நம் உள்ளங்களைப் பேணிக் காத்தல் செய்யாது வாளா நிற்கின்றோம். மனம் மருள நேர்கின்ற துயரம் நிறைந்த சூழலில் பட்டும், ஒவ்வொரு நாளுக்கும் தினை அளவிலேனும் நம்மை நாம் உய்வித்துக் கொண் டோம் அல்லமே!

உங்கள் வாழ்க்கையெனும் உள்ளச் செலவிற்குக் குறியாவது எது? அக் குறியீட்டு அளவில் எவ்வளவில் தேர்ந்து விளங்கியது உங்கள் அறிவு? போக்கிற்குத் தடுப்பு அற்ற இப்பரந்து அகன்ற வானத்தில் நோக்க மிலாது, மிகவும் கூரியதாகிய அம்பு ஒன்றினை எய்து வீணுக்குதல்போல், உங்கள் வாழ்க்கை எவ்வகைஊதியமு மின்றிக் கழிகின்றது. இவ்விடைப்பட்ட தேர்வாகிய வாழ்வு சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவினால் தேர்ந்து, இதன் பயன்கொண்டு உய்வீர்களாயின், இவ் வாழ்க்கைச் செலவு மிக அருமையுடையது ஆகும்.

விரிப்பு :

உலகத்தீரே என்றது இவ்வுலக உருண்டையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எல்லா மாந்த இனங்களையும் விளித்துக் கூறியது. முன் பாட்டில் உலகம் உண்டு என்ற தேற்றக் கருத்தை அடியொட்டி, உண்டாகிய அவ்வுலகத்து நிற்கும் மாந்தரீரே என்று விளிக்கப் பெற்றது. இச்சொல் இருமுறை அடுக்கி வந்தது அண்மையும் சேய் மையும் நிற்போரை விளிப்பான் வேண்டியும், இக் கருத்திற்குச் செவி கொள்ளுமாறு அவரை வலியுறுத்த வேண்டியுமாம்.

அலகு:- அளவு; ஒரு வரையறை; ஓர் எல்லை.

பிறக்கம்:- பிறப்பு. அம் ஈறுபெற்ற பெயர்ச் சொல். பிறக்குதல்- வெளிப்படுதல்.

உள்ளம்:– படிதலாகிய உணர்வு. இப் புடவியின்கண் நுண்ணிதாய் ஊடறுத்துப் பரந்து நிற்கும் உணர்வுப் பெருக்கத்துள், நம் கொள் திறனுக்கேற்பப் புலப்படுகின்ற ஒருபுடை உணர்வு படிகின்ற இடம். இவ்விடம் நாம் உழுது பண்படுத்தும் அளவிற்கேற்பப் பயன் தருவதாகிய மூளைச் சேற்றிற்கும், உயிர்ப்பு நிகழும் நெஞ்சாங்குலைக்கும் இடைப்பட்டு உணர்வு ஏறியிறங்க, நிற்கும் என்பர் மெய்ந்நூலார்.

சான்றல்: நிறைதல், மேம்பட்டு நிற்றல்.
வேட்டல்: அழுந்தி விரும்பல்.

பிறப்பு: உருவிழந்து நின்ற புலம்பன் (ஆன்மா) உருவேற்று வெளிப்படல். என்னை? கட்புலனுக்குப் புலப்படாது நிற்கும் உயிர்வளி (பிராணவாயு) தீப்பொறியுட் பற்றி ஒளி வடிவாகிச், சுடர் என்று நின்றாற் போல. திண்மமும், தண்மமும், சூடும், இயக்கமும், ஒடுக்கமும் ஆகிய ஐம்பூத நிலைகளில் புலம்பன் படிப்படியாக இறங்குதல் செய்யும். இப் படிநிலைகளில் தனித்தனித் தங்குதலும், ஒன்றி வெளிப்பட்டுப் பிறப்புறுதலும், அறுதலும் நாம் விரும்பி நிகழுதல் அல்ல.

இறப்பு: பூத நிலைகளில் படிந்து நின்ற புலம்பன் அவற்றை விட்டுக் கடந்து ஆவி நிலையில் நிற்குந் தன்மை. இறத்தல்–கடத்தல்–வெளிப் போதல்.

ஊங்கு: இவ்விடைப்பட்ட நிலையில்.
உவத்தல்: உள்ளம் களித்தல். எண்ணி மகிழ்தல்.
அழுங்கல்: மிகுவருந்தல்.
எள்ளல்: சிறிதாமென் றிகழ்தல்.
ஓம்பல்: பேணிக்காத்தல்.
அலமரல்: துயரச் சுழற்சி.
வைகல்: நாள்தொறும்.

வானோக்கி............அன்ன: எடுத்துக் காட்டு உவமை.

இப்பாட்டு, வாழ்வு அமைவினையும், அதற்கியைந்த பெருமையினையும், அப்பெருமையை நிலைநிறுத்தும் தன்மையினையும், அவ்வழி நில்லாத வாழ்வின் வெறிய போக்கினையும், அவ்வழி நின்ற வாழ்வின் அரிய நிலையினையும் கூறிநிற்கும், நேரிசை ஆசிரியப்பாவாம்.

இது, பொதுவியல் என் திணையும், பொருண்மொழிக்காஞ்சி என் துறையுமாம்.

(வளரும்)

நூற்சுருக்கம்

உலகின் முதல் இலக்கியச் செம்மொழி

(The primary classical language of the world)

மொழிநூற் பேரறிஞர் பண்டித. புலவ கலைத்தலைவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது.

நூல் :

இலெமுரியாக் கண்டம் இருந்தமைக்குப் புறச்சான்றுகள்: இலெமுரியாக் கண்டம் என்ற தலைப்பில் இராமச்சந்திர தீட்சதர் கூறுவதன் சாரம் ; "கோண்டுவாணு நிலப்பகுதி கடல் கொள்ளப்பட்டதால், ஆத்திரேலியா, தென் இந்தியா, தென் ஆப்பிரிக்கா ஆகியவை தங்களிடையே இருந்த இணைப்பு மறையப் பெற்றுத் தனித்தனியாயின. மடகாசுக்கர், மரிசசு, மாலத்தீவுகள், இலக்கத் தீவுகள் ஆகியவை ஒரே கோட்டில் அமைந்து கிடப்பதினின்று அவ்விணைப்பிருந்தது உண்மை எனத் தெரிந்து கொள்ளலாம். மண்ணியல் ஆய்வுகளின்படி, மடகாசுக்கர், இலங்கை தென்னிந்தியா ஆகியவை நில

ஒற்றுமை உடையன. ஆங்காங்குக் காணப்படும் பாறைகள் ஒரே தன்மை வாய்ந்திருப்பதால் முன்னர் ஒன்றாய்க் கிடந்த பெருநிலப் பரப்பின் பகுதிகளே அவை என்று தெளியப்படும்''

எட்கார் தர்சுதன் (Thurston) என்பார் தென்னிந்திய 'சாதி' வரலாறு என்ற நூலில் ஒல்தாம் என்பார் கூறுவதாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் காணப்படும் விலங்குகள் செடிகொடிகட்கிடையே நிலவும் ஒற்றுமைகளினின்று அவை முன்னொருகாலத்தில் நிலத்தால் இணைக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.''

ஏக்கல் என்பார் குறிப்பிடுவது: ''ஆசியாவின் தென்கரையிலுள்ள சுந்தரத் தீவுகளினின்று ஆப்பிரிக்கக் கிழக்குக் கரை வரை, இன்றைய இந்தியப் பெருங்கடலுள் முன்னர் பெரியதொரு நிலப்பகுதி இருந்தது. அங்குக் காணப்பட்ட ஒருவகைக் குரங்குகளின் பெயரைக்கொண்டு அஃது இலெமூரியா என்று கூறப்படும். மாந்த இனம் அங்குத்தான் தோன்றியிருத்தல் கூடும்''

சென்னை மாகாண ஆட்சியியல் தொகுப்பு நூலில் கூறப்படுவது: இன்றையக் இந்திய கடற்பகுதியில் முன்பு இருந்து இப்பொழுது உள் மூழ்கிவிட்ட நிலப்பரப்பே மாந்தனின் பிறந்தகம் என்பதற்குப் பல சான்றுகள் உள. செடி கொடி, விலங்குகளின் அமைப்பிலுள்ள ஒற்றுமை தலையாய சான்றாகும். இலெமூரியாவே மாந்தனின் பிறந்தகம் என்று கொண்டால், மாந்த இனம் முதலில் ஒன்றாக இருந்து பின்னர்க் குடிப் பெயர்ச்சி வாயிலாக உலகின் பல பகுதிகட்கும் பரவியது எனும் கொள்கை மேலும் வலுவடைகின்றது.''

வடக்கு மாந்தர், நடுத்தரைக் கடல் மாந்தர் ஆகியோரின் முன்னோர்கள் முன்னொருகாலத்தில் தென்னிந்தியாவின் வழியாகவே பரவிச் சென்று தற்பொழுது தாங்கள் வாழும் பகுதியை அடைந்திருத்தல் வேண்டும் என்பது இனவியல் ஆய்வுகளால் காணக்கிடக்கின்றது. கிழக்குக் கரையில் காணப்பட்ட மாந்த எலும்புகளும் பிற சான்றுகளும் வரலாறு கணிக்க முடியாத நெடும் பழமையைக் காட்டுகின்றன தென் இந்தியாவைப் பற்றிய முது பழஞ்செய்திகள் வியப்பூட்டுவனவாயிருக்கின்றன. மண்ணியல் இயற்கை வரலாற்று ஆய்வுகளிலிருந்து

முன்னொருகாலத்தில் தென்னிந்தியா இன்றைய ஆசியாவின் பகுதியாக இருந்ததில்லை என்பது தெரிவாகின்றது. வடமொழிப் புராணங்கள், இலங்கைப் புத்த சமயவாணர்கள், மேற்குக் கடற்கரையில் வழங்கும் செவிவழிச் செய்திகள் அனைத்துமே தென்பகுதியில் ஏற்பட்ட கடல் கோளினைப் பற்றிப் பேசுகின்றன. நோவாவின காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு கி. மு. 2348 இல் ஏற்பட்டதாக ஆங்கிலேயர் கூறுவர். தென் பகுதியில் ஏற்பட்ட கடல்கோள் கி. மு. 2387...இல் என இலங்கை வாணர் கூறுவர். இரண்டு பக்கத்தினரும் ஒருவரையொருவர் கலந்துகொண்டு இம்முடிவுக்கு வந்தாரிலர்.

மாந்த இனத்தின் பிறப்பு:

தார்வினின் கூர்தலறக் கொள்கை மாந்தன் குரங்கினின்று தோன்றியவன் என்று நிலை நாட்டிய பொழுதிலும், அக்கொள்கை பிழைபட்டதென்று இன்றைய ஆய்வாளர்கள் பலர் கூறுகின்றனர். ஆதலின் மாத்த இனத்தின் பிறந்தகத்தைக் கண்டு பிடிக்க உயிர் நூல் அடிப்படை துணை புரிவதாயில்லை. எனவே நாம் மாந்த நூலையே அணுக வேண்டியதாகின்றது. அவ்வடிப்படையில், மாந்தன் தோன்றி வாழ்வதற்கேற்றவாறு முதன்முதலில் உலகின் எந்தப் பகுதி செப்பமுற்றது என்பதைத் தெரிந்து கொள்ளல்வேண்டும். அவ்வாறு ஆராய்கையில் தற்பொழுது உள்ள இந்தியப் பெருங்கடலின் கரையோரமே பல்வகையிலும் மாந்தனின் தொடக்க வாழ்க்கைக் குகந்த பல தன்மைகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. கடலுள் மூழ்கிய இலெமூரியாவின் பகுதிகளாகக் கருதப்படும் சாவகம் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில்தான் மிக முந்தியல் மாந்தர்களின் எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து தென்னிந்தியப் பகுதியை உள்ளடக்கிய இலெமூரியாக் கண்டமே மாந்தனின் பிறந்தகமாக இருத்தல் வேண்டும் என்று முடிவு கட்டலாம். இம்மிக மிக முந்திய மாந்தரின் எலும்புக் கூடுகளின்று அவர்கள் வாழ்ந்த காலத்தைக் கணக்கிடும் அறிஞர் பலர் அறிவியல் ஆராய்ச்சிகளின் துணைகொண்டு அஃது இலக்கக் கணக்கான ஆண்டுகட்கு முந்தியது என்று கண்டுள்ளனர். கிழக்காப்பிரிக்க மாந்தனின் காலம் 1 கோடி 75 இலக்கம் ஆண்டுகட்கு முந்தியதாகும் என இலீக்கி என்பார் கணக்கிட்டுள்ளார்

தமிழன் உருவாதல்

முந்தியல் தமிழரின் முன்னோர் முதலில் மலைப்பகுதியிலேயே வாழ்ந்திருக்க வேண்டும். மலைகளில்தான் அவர்கட்கு வேண்டிய அனைத்தும் முயற்சியின்றிக் கிடைத்தன. மக்கள் தொகை மிகுந்து பயிர்த்தொழிலறிவும் ஏற்பட்ட பின் மக்களுட் சிலர் கீழிறங்கிக் காடுகளையும் மேய்ச்சல் நிலங்களையும் அடைந்திருத்தல் வேண்டும். உழவுத் தொழிலில் மேலும் முன்னேறிய மக்கள் மேலும் பரந்துபட்டு நன்செய்ப் பயிர்கட்கேற்ற மருத நிலத்தை அடைந்திருக்க வேண்டும். நாகரிகம் வளர்ந்ததும் அறிவியல் உருவாகியதும் மருத நிலத்தின் வள வாழ்க்கையாலேயே. அதன்பின் ஏற்பட்ட நெருக்கடிகளாலேயே நெய்தல் நில வாழ்க்கையும், பின்னர் வேறு வாழ்க்கை வழியற்ற நக்குப் பாலைநில வாழ்க்கையும் தோன்றலாயின. இதுவே தமிழரின் ஐந்திணை வாழ்க்கை வரலாறும்! இலெமூரியாக் கண்டத்தின் நில அமைப்பு முறையும் இன்றையத் தமிழகத்தின் நில அமைப்பைப் போலவே இருந்தது. பஃறுளி, குமரி ஆகிய இரு பேரியாறுகளும் குமரிக் கண்டத்தின் தென் எல்லையிலும் வட எல்லையிலும் மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்ந்தன. ஐந்திணை நிலங்களும் வரிசையாக ஒன்றையொன்று தொட்டபடி அமைந்திருப்பது தென்னகத்திலேயேதான்.

''ஐவகை நிலங்களும் ஒன்றையொன்று தொட்டபடி வரிசையாக அமைந்திருப்பது விந்திய மலைக்குத் தெற்கிலேயே. மாந்த நாகரிகத்தின் ஐந்து படிநிலைகளும் இவ்வைவகை நிலங்களில் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் விளைவுகளே! மாந்த நாகரிகம் நிலவியலின் ஆட்சிக்குட்பட்டதே என்பதைத் தென்னக அமைப்பையும் மக்கள் வாழ்க்கை முறையையும் கூர்ந்து நோக்கி உணர்ந்து கொள்ளலாம். உலகத்தின் வேறு பகுதிகளிலும் மிகப் பரந்துபட்ட அளவில் ஐவகை நிலங்கள் அமைந்துள்ளன. அங்கும் நாகரிகம் நிலவுகின்றது. ஆயினும் நாகரிகம் முதலில் எங்குத் தோன்றி எங்குப் பரவியிருக்க வேண்டும்? குறுகிய இடத்திலேயே முதலில் தோன்றிப் பின்பே பரந்துபட்டிருக்க வேண்டும் என்பதே பொருத்தமாகும். இயற்கையின் முதல் ஆய்வுக் களமும் மாந்தப் பண்பாட்டில் முதல் ஆராய்ச்சியும் பரந்த ஐரோப்பிய ஆப்பிரிக்கவெளிகளில் அமைந்தன என்று கொள்வதைவிட விந்திய மலைக்குத் தெற்கிலேயே அமைந்திருந்தன என்று கொள்வதே மாந்தனின் தொல்வரலாற்றை நாம் நன்கு புரிந்துகொள்ள உதவும்

மாந்த இன வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகளும் ஒன்ருகக் காணப் படும் ஓரிடத்திலிருந்து நாகரிகம் பரவிப் புறஞ்சென்றிருக்கின்றது என் பது பொருந்துமா, அல்லது, பரந்த பல பகுதிகளில் நிகழ்ந்த நாகரிக வளர்ச்சி நிலை அனைத்தையும் இயற்கை குறுகிய ஒரு பகுதிக்குள் திணித்து வைத்திருக்கின்றது என்பது பொருந்துமா என்பதை ஓர்க என்பர், வரலாற்ருசிரியர் சீனுவாசர்.

தமிழின் தோற்றம் :

(கி. மு. 200,000 100,000)

தமிழ் மொழிகளுள் மூந்தியது மட்டுமன்று; உலகத்தின் மூதன் மையான இலக்கியச் செம்மொழியுமாகும். எனவே ஒலிகளால் அமைந்த உலக இயற்கைப் பொது மொழியினின்றே அது தோன்றி யிருத்தல் வேண்டும். அவ்வொலிகள் அறுவகைப்படும். (1) உணர் வொலிகள்: (2) மிடற்ருெலிகள்: (3) ஒப்பொலிகள் (4) குறிப் பொலிகள்: (5) வாய்ச்செய்கையொலிகள்: (6) சுட்டொலிகள்.

உணர்வொலிகள் — ஆ, ஊ, ஓ, ஏ, ஐ ஓ.

மிடற்ருெலிகள் — ஏ, ஓ, ஆ.

	ஒலி		சொல்
ஒப்பொலிகள் —	கட	-	கடவு
	கர்	-	கரை
	இம்	-	இமிர்
	உர்	-	உரறு
	சீத்து	-	சீறு
	கூ	-	குயில்
	காகா	-	காக்கை
	ஞிமிர்	-	ஞிமிறு
	கிச்சு	-	கிச்சான்
	காழ்	-	கழுதை.
குறிப்பொலிகள்.	உம்	-	ஒப்புதலைத் தெரிவிக்கும் ஒலி.
	சீ	-	வெறுப்பைத் தெரிவிப்பது.
	தோ, தோ	-	நாயை அழைக்கும் ஒலி.
	பே, பே	-	கோழியை அழைக்கும் ஒலி.

(தொடரும்)

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ? — முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

1. சிறுவர் செல்வம்.

ஆக்கியோன் : மருதூர் இளங்கண்ணன், பாண்டியமன்றம்,
செயங்கொண்டசோழபுரம்

விலை உருபா 1—50.

2. மலர்வனம்.

(பொங்கற்பரிசு)

ஆக்கியோர்: மருதூர் இளங்கண்ணன், கென்னடி நிலையம்.
செயங்கொண்டம்.

விலை 50 காசு.

சிறுவர் செல்வம் : சிறுவர்க்குரிய பாட்டு நூல். படங்களையும் சிறுவர்க் கேற்றவாறு ஆசிரியரே வரைந்துள்ளார். பாடல்களில் நல்லுணர்வு தலைதூக்கி நிற்கின்றது. பொழுது போக்குக்குரிய வெற்றுப் பாடல்களாயிராமல் கருத்துடன் எழுதப்பட்ட பாடல்கள் மிகுதியும் உள. அறிவு ஒழுக்கம், சுறுசுறுப்பு, இயற்கை ஈடுபாடு, மனத்திட்பம் ஆகிய நற்பண்புகள் ஆங்காங்கே வற்புறுத்தப்படுகின்றன. இவை தனித்தனி அறிவுரைகளாக நில்லாமல் பாட்டின் போக்கோடு இயைய இடையிடையே அமைந்திருப்பது நன்று. முறைக்காகச் சொல்லப்படும் சொற்களாக இராமல் ஆசிரியரின் உள்ளுணர்வின் வெளிப்பாடாக இவ்வெண்ணங்கள் கனிந்துள்ளன.

பாடல்கள் இளைஞர்க்குச் சுவையூட்டுவனவாக உள்ளன. ஆயினும் ஆசிரியர் நடையிலும் வடிவத்திலும் மேலும் கருத்தைச் செலுத்தியிருந்தால் பாடல்கள் செப்பமானவையாக அமைந்திருக்கும். சிறுவர்க்கான பாடல்களாக இருப்பதால் வெறும் பொழுது போக்காக அமைந்தாற்போதும் என்பது எவ்வளவு பிழையோ, கொச்சையான அல்லது சிதைந்த பேச்சு வழக்குச் சொல்லுருவங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் அவ்வளவு பிழையாகும். சிறுவர் பாடல்களில் சிறுவர் அன்றாடம் வாழ்வில் பயன்படுத்தும் சிதைந்த உருவங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயம் அன்று. பேசுவது பிழையாக இருந்தாலும் சொற்களின் திருந்திய வடிவங்களைப் புரிந்து கொள்ள இளைஞரால் முடியும். (திருந்திய வடிவங்களை நாம் அவர்கட்கு மேலும் மேலும் பழக்குவிப்பதன் வாயிலாகத்தான் அவர்தம் பிழைகளையும் திருத்த முடியும்.)

எடுத்துக்காட்டாக, 'பழிச்சிக் காட்டித் தின்னலாம்' என்ற வரி 'பழித்துக் காட்டித் தின்னலாம்' என்றிருப்பதால் சிறுவர் வாயில் நுழையாமலும் போகாது; இயற்கையுணர்வு கெடும் என்றும் கூற முடியாது. அதுபோன்றே வந்தாங்கோ, வச்சாங்கோ, செஞ்சாங்கோ, புடிக்கிறே போன்ற பல கொச்சை வடிவங்களும் தவிர்க்கப்படவேண்டியவை. உனது கால்கள், அவைகள், மோடு போன்ற பிழைகளும், பல வடசொற்களும் தவிர்க்கப்பட வேண்டியவை. ஒருசில இடங்களில் ஓசைக் குறைபாடுகளும் உள. பொருட்சிறப்பில்லாத ஒருசில பாடல்களையும் தவிர்த்திருக்கலாம்.

மலர்வனம்: பொங்கல் வாழ்த்து என்ற பெயரால் வெற்றுரைகளும் போலிச் சொல்லடுக்குகளும் நிரம்பி வரும் இக்காலத்தில்

தொடர்ச்சி 32-ஆம் பக்கம்.

மறைந்துவரும்
தமிழ்ச் சொற்கள்.

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனுல்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்ருகப் பேணிவர நாம் முனேவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:

பொ. முனியப்பன், புளியங்குடி, நெல்லை மாவட்டம்.

அறைவீடு — பல்வகைப் பொருட்கள் வைக்கும் இடம். (இவ்விடம் வீட்டினுள் இருப்பதால் 'உள் வீடு' என்றும் உரைப்பர்.

இக்காலத்தில் இதனை ஆங்கிலத்தில் "Store Room" என்கின்றனர்.)

ஆட்டம் — போல.

இரண்டாம் கட்டு — சமையல் அறைக்கு முன்புறமுள்ள அறை

இராட்டு — சிறிய குழந்தைகள் அல்லது ஆவின் கன்று ஏதேனும் தவறு செய்யும்போது அதனை அன்பாகக் கடியும் சொல்.

இளக்காரம் - ஏளனம், மதிப்பளியாமை, உயர்வு தராமை.

உடப்பு — குப்பைக்குழி, பள்ளம்.

உழலைக் கம்பு - தோட்டத்திலோ, வீட்டிலோ உள்ள சுற்றுச் (வேலிச்) சுவரின் வாயிலில் கதவிற்குப் பகரமாக இருபுறமும் ஒரே அளவாகத் துளையிடப் பெற்றுள்ள இரண்டு உறுதியான கம்புகளை நட்டு, ஆடு மாடுகளை உள்ளே வரா வண்ணம் தடுக்க அத்துளைகளின் வழியே செலுத்தப் பெறும் கம்பு.

உறை — தானியங்களை இட்டு வைக்கும் (அடுக்கினையுடைய), மிகப் பெரிய மட்டாழி.

ஊட்டி - கழுத்து, குரல்வளை அல்லது உணவுக்குழல்.

எகத்தாளம் - நிறைவு, தாராளம், மிகுதி.

எமத்து -தொல்லை, தொந்தரவு, இடையூறு.

கிழி(ளி)யஞ்சுட்டி - கார்த்திகை விளக்கு.

குந்தாணி - மேற்பாகம் விரிந்தும் கீழ்ப்பாகம் குவிந்தும் செல்லும் வட்ட வடிவக் கல் தொட்டி.

குலுக்கை (உமர்) - தானியங்களை இட்டு வைக்கும் மட்டாழி.

குறியாப்பு (குறியெதிர்ப்பு) - ஒன்றை எதிர் நோக்கிச் செய்யும் உதவி (221-ஆம் திருக்குறளில் வரும் சொல்லில் சிறிது மருவியுள்ளது இச்சொல்)

குறி நாழி - களத்தில் குவித்து வைக்கப் பெற்றிருக்கும் தவசத்தில் சிறிதும் எடுக்க இயலாதவாறு அதன்மீது சாணி நீரால் கோலமிடும் நாழி.

கோப்பு - நிலைமை.

சங்காத்தம் - தொடர்பு, நட்பு, உறவு.

சட்டகப்பை - தோசை திருப்பி ('கச்சாயக்குச்சி' என்றாலும் தோசை திருப்பியே.)

சட்டுவம் - ஏனத்தின் (பாத்திரத்தின்) அழுக்குச் சுரண்டி.

சோமாரி - பயனற்றவன், சோம்பேறி, முட்டாள்.

சோமாறுதல் - நீரையோ அல்லது பிற பொருள்களையோ ஒன்றி லிருந்து மற்றொன்றுக்கு மாற்றுதல்.

தாட்டுதல் - அனுப்புதல். செலுத்துதல்.

தோரணை - பெருமை.

பீற்றுதல் - தற்பெருமை பேசுதல்.

பேத்துதல் - உளறுதல்.

பொட்டுப் பொடுக்கு - வேகமாக, விரைவாக, கடிதாக.

மட்டப்பா - கூரை இல்லாத மட்டமான வீடு.

மரவை- மரத்தாலும், கல்லாலும் ஆகிய ஏனங்களுக்குரிய பொதுப் பெயர்.

மத்து - வெந்த பொருளை மாவு போல் கடையும் மரத்தாலாகிய கருவி.

முக்கி - நிறைத்து.

முத்திரைப் பலகை - களத்தில் குவித்து வைக்கப் பெற்றிருக்கும் (சோளம், கேப்பை போன்ற) கதிர்களைச் சிறிதும் எடுக்க இயலாதவாறு அக்கதிர்களின் மீது பொடி ஈர மணலும் சாம்பலும் கலந்த பொருளை அப்பி, அதன்மீது எழுத்துப் பதிக்கும் பலகை.

முறைத்தல் - சினத்தோடு பார்த்தல்.

வாரியல் - குச்சிகளாலாகிய துடைப்பம்.

விளக்குமாறு - பனை, புல்லாலாகிய துடைப்பம்.

விசும்புதல் - அழுதல்.

வசக்கு - பழக்கு.

அப்பு - ஒட்டு.

குப்புதல் - தொடர்ந்து அடித்தல் (அல்லது) குத்துதல்.

கப்பி – பொடிக்கற்கள், சரளைக் கற்கள்.

பம்பிக்கொள் - மறைந்துகொள், ஒளிந்து கொள்.

சூம்பிப் போதல் – வளர்ச்சியற்றுப் போதல்.

காம்பிப்போதல் - ஒரு பொருள் தன் தன்மை இழந்து கெட்டுப்போதல்

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர் :

புலவர். தி. நா. அறிவுஒளி, திண்டிவனம்.

மரபுத்தொடர்கள்.

அற்ருலம் (அல் + தாலம்) - இரவுணவு (அத்தாளம்).

முற்ருலம் (முன் + தாலம்) – பகலுணவு (முத்தாளம்).

வெங்காரம் சுற்றல் - செம்மையாக உதைத்தல்.
கடுக்காய் கொடுத்தல் – ஏமாற்றுதல்.
மாறல் - விலைக்கு விற்றல்.
மாருது - விலை போகாது.
ஓரகத்தி - பங்காளி மனைவி.
சீர்ப்படல் × சீர்ப்படாது (ஒழுங்காக வாழல் × சிறப்பில்லாது போதல்)
மொட்டையடித்தல் - அற ஏமாற்றி ஒருவனை வறியனாக்குதல்.
கொடிகட்டிப் பறக்கிறதோ? - மிக்க செல்வாக்கு ஓங்கி நிற்கிறதோ ?
விளக்கேற்றி வைத்தல் - குடும்பத்தை ஓங்கி வளர்த்தல் - செழிப்புடையதாக்கல்.
கயவாளி (காவாலி) - தீயவன், ஏமாற்றுக்காரன்.
பொடிவைத்தல் - உட்குறிப்போடு பேசுதல் (கெட்ட எண்ணத்தை மறைத்து நயம்படப் பேசுதல்)
பிள்ளைத்தாய்ச்சி – கருவுயிர்த்த பெண்.
ஆண்டு மாறிப் போதல் - பருவகாலம் மாறுதல்.
கைமாற்று - கைக்கடன்.
கூறுகெட்டவன் - வகைகெட்டுப் போய்ப் பிழையாக நடப்பவன்.
தண்ணீர் தெளித்துவிட்டேன் - நம்பிக்கையிழந்துவிட்டேன.

(தொடரும்)

(28-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொங்கற் பரிசாகச் சிறிய சில பாடல்களை (பொங்கலோடும் பெரிதும் தொடர்பில்லாத) வெளியிட்டுள்ள ஆசிரியரின் எண்ணம் பாராட்டத் தக்கது. இந்நூலிலும் சிறுவர்க்குரிய பாடல்களே மிகுதி. முந்திய நூலில் உள்ள குறைகளே இதிலும் உள. 'உச்சிக் குடுமி' போன்ற பாடல்கள் வேண்டத் தகாதவை. அவ்வளவு கீழிறங்காமலேயே சிறுவர்க்குச் சுவையூட்ட முடியும். ஆங்கிலமொழிப் பாடல்கள் சிலவும் நூலில் இடம் பெற்றுள்ளன. ஆங்கிலமொழி மரபு பலவிடங்களிற் பிழைபடுகின்றது.

ஆசிரியர் மேலும் தம் முயற்சியில் ஊன்றிச் செப்பமான பாடல்களை எழுதுவாராயின் அவரால் விளையும் பயன் மிகுதியாயிருக்கும்.

'கல்லாடன்'

இரா. வென்றியன்,
வை கழராம்பன்,
அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

மொழிநலம் கெடுக்கும் இழிஞர்

ஒவ்வொரு மொழியும் காலத்தால் அழியாது சிறந்திலங்க வேண்டுமெனில், அம்மொழி நால்வகைப்பட்ட இன்றியமையாத செயல்களை (Functions) இடையருது, செப்பமாகச் செய்யவேண்டும். மொழி செயல்புரிய வேண்டுமென்பது, மொழியைப் பயன்படுத்து வார் செயலைக் குறிக்கும். ஒவ்வொரு மொழியும் எண்ணங்களைக் காத்தல்(Preservation of Ideas),பரப்பல்(Transmission),தொகுத் தல்(Collection),முன்னறிவித்தல்(Prediction), என்றநான்கு செயல் களைச் செய்யவேண்டியுள்ளது. சமற்கிருதம் முதலிய மொழிகள் வழக்கு இறந்தமையின் முதல்காரணம் இச்செயல்களைச் செப்பமாகச் செய்ய முடியாமற் போனமையே. இச்செயல்களை நிறைவாகச் செய்யும் மொழியே சிறந்தமொழி! இன்றேல் 'நோயுள்ளமொழி'தான். இற்றை மாந்தரின் மொழிநலங் கெடுத்துப் பழி எய்தும் இழிஞர் குறித்து இவண் உரைத்து, மொழிநலம் நாடுவோரை எச்சரிக்கையாயிருக்க வேண்டுகின்ருேம்.

ஒவ்வொரு மொழியிலும் பல்வேறு காலங்களில் பல இலக் கியங்கள், அறிவுநூல்கள், மெய்ந்நூல்கள், கலைநூல்கள் வெளியா கின்றன. அவை அவ்வக்கால மாந்தரின் பொருள்நிலை (Economical status), பண்பாடு, கலைவளர்ச்சி முதலியனபற்றிக் குறிக்கின்றன; இவற்றுடன் அந்நாளைய மாந்தரின் பல்துறைப் பட்டறிவுகளையும்

(Experiences of various fields) கொண்டு இருக்கும் ஒவ்வொரு மொழியும் தன் முன்னை மரபினரின் படைப்புகளைக் காத்துவைத்துப் பின்னை வழியார்க்குக் கொடுக்கவேண்டும். மொழியின் இச் செயலாலேயே, நமக்குப் பழந்தமிழ்நூல்கள் பல கிடைத்துள்ளன. இதனால் பண்டைப்பெருமை சிறுமைகளை உணரவும், இற்றைநிலையுணர்ந்து செயல்படவும் மாந்தர்க்கு வாய்ப்பளிக்கிறது நம்மொழி.

இவ்வாய்ப்பைக் கெடுக்கின்றவர்கள் தன்னலங்கருதியே அவ்வாறு செய்கின்றனர். மொழியின் 'சேர்த்துக் காத்து அளிக்கும்' செயலைத் தடைசெய்தால், 'தமிழனின் மூளை'யை மழுக்கலாம்; தம் விழைவுப்படி அவனைக் கைப்பாவையாக்கிக் கொள்ளலாம்; பொருளியல், குமுகாயவியலில் அவனை அடிமை கொள்ளலாம்;, என்று எண்ணிய ஆரியர் அவற்றிற்கேற்பத் தம் சூழ்ச்சித்திறனைப் பயன்படுத்திச் செயலாற்றினர்–ஆற்றுகின்றனர். விளைவு? "ஆற்றில் ஓலைச் சுவடி தானாகவே புதுப்புனலை எதிர்த்து வந்தது'' என்ற புளுகு மூட்டையைத் தமிழன் நம்பினான். (உண்மை என்னவெனில், ஓலைச் சுவடிகளோடு கட்டப்பெற்ற மீன்களே ஆற்றில் அவற்றை ஏந்திக் கொண்டு நீரில் எதிர்த்து வந்தன.) 'ஆடிப்' பதினெட்டில், ஆன்ற தமிழ்ச்சுவடிகளை ஆற்றில்விட்டால் அனைத்தும் வந்தெய்தும் என்று மூடத்தனமாக நம்பி, நம்மொழி பன்னூருண்டுகளாகக் காத்துவைத்திருந்த பழந்தமிழ் நூல்களை ஆற்றுநீரில் ஆண்டுதோறும் எறிந்து வருகின்றான். இவ்வாறு புதுப்புனல் போற்றும்நாள் பழந்தமிழ் நூல் அழிப்புநாளாயிற்று.

இவ்வாரியர் தவிர, களப்பிரர்கள் என்ற கூட்டத்தினரும் பழந்தமிழ் நூல்களின் அழிவுக்குப் பெருங்காரணர்கள் ஆவர். பண்ணோடு அமைந்த தேவார ஏடுகள் கறையான் புற்றிலிருந்து எடுக்கப்பெறத் தமிழன் என்ன கரிசு இயற்றினானோ? ஆரியப் பார்ப்பனர் என்ன சூழ்ச்சி செய்தனரோ? நினைக்கினும் நெஞ்சு நெகிழ்கின்றது. இயற்கையும் தமிழனைப் பழிவாங்கியது. பல கடற்கோள்கள் பல நூல்களைக் கடலின் அடிமடிக்குக் கொண்டு சென்றன. அறிவு முனைப்பில்லாத் தமிழரும், முந்தையர் எழுதிப் பிந்தையருக்கு விட்டுச்சென்ற அரிய ஓலைச்சுவடிகளைப் பரண்மேலிட்டுப் புழுதியேற்றிக் கறையான் அரிக்க விடுகின்றனர். (அடுப்பெரிக்க மட்டும் சுவடிகளைப் பயன்படுத்துவதில்லை!) மொழியின் காப்புத்தொழிலுக்குத் துணைசெய்ய முடியாமற்போயினும், தமிழன் அதன் அழிவுக்குக் கருவியாயிருக்க

வேண்டா. இற்றை நிலையில், அச்சுக்கருவிகளும், நூற்காப்பு நூலகங்களும் மிக்கு இருக்கின்றமையால், இக்காப்புத்தொழில் இடையறாமல் நிகழ்ந்து வருகின்றது.

கருத்துகளைச் சொல்வடிவில் பரப்புவது மொழியின் சிறப்பான இன்றியமையாத செயல். மொழியைச் செப்பமாக அறியாதவரும், 'மொழியைக் கெடுத்தே தீரவேண்டும்' என்பதே குறியாய்க்கொண்டவரும் மொழியின் பரப்புத் தொழிலுக்குக் கேடுவிளைக்கின்றனர். மொழியறிவுச் செப்பமில்லாதவர்கள் தம் குறுகிய அறிவுக்கண்ணோட்டத்தில் குமுக நிலையை நோக்கித் 'தாம்கண்டதே காட்சி' என்று எண்ணித் துணிந்து வெளிப்படுத்துகையில் தம்மை அறியாமலேயே மொழி நலங்கெடத் துணை போகின்றனர். இனி மொழிநலங்கெடுக்க, அறிவுடன் முனைவார்,

(1) மொழிக்கலப்பு
(2) மொழித்தூய்மை பேணாமை
(3) புதுக்கருத்துகள் வெளிவரத் துணைநில்லாமை
(4) மொழியைச் செப்பமான ஆக்கநெறியில் செலுத்தாமை
(5) மொழியை வாணிகமாக்கிப் பிழைத்தல்

முதலிய வகைகளில் செயற்படுகின்றனர்.

தமிழ்மொழியைப் பொறுத்தவரை பிறமொழிக்கலப்பு அறியாமற் கலத்தலும், வலிந்து வேண்டுமென்றே கலத்தலும் தனித்தமிழ் அறியாராலும், பார்ப்பனச் சேரியினராலும், அவர் வழிப்பட்டாராலும் செய்யப்படுகின்றது. அறியாத் தமிழன், தமிழில் எல்லாம் (அவனுக்குத் தெரிந்த பிறமொழிச் சொற்களைக்) கலக்கின்றான். அறிவும் கவடும் உடைய ஆரியரும், அவர்வழிப்பட்டாரும் வேண்டுமென்றே வலிந்து வடசொற்களைக் கலக்கின்றனர். தமிழில் தக்க சொற்கள் இருக்க, தம்மொழி வல்லாண்மையை நிலைப்படுத்தி அதன்வழித் தமிழனை அடிப்படுத்துவான் வேண்டி வடசொற்கள் கலக்கும் மணிப்பவள நடை ஏடுகளான கல்கி, மித்திரன், ஆனந்த விகடன், தினமணி முதலிய தாளிகைகளும், அவர்கள் வெளியிடும் நூல்களும் காண்பார் இதனை உணரலாம். தமிழில் வடசொற்கலப்பு மிகமிகத், தனித்தமிழ்ச் சொற்களை அறவே வழக்கிலிருந்து நீக்கிவிட நினைக்கும் இச்சூழ்ச்சியைத் தமிழர் இனியாவது உணர்வார்களாக.

'மொழித்தூய்மை' என்று இங்குக் குறிக்குங்கால் சிலர் குறிப்பதுபோல மொழியின் 'தெய்வத்தன்மை' முதலியவற்றைக் கருதுவதாக நினைத்தல் வேண்டா. மொழித்தூய்மை என்கையில், மொழியை அதன் செப்பமான நிலையில் இலக்கணம் உணர்ந்து, சரியாகப் பயன்படுத்தித் தம் உணர்வைத் தெளிவாக வெளிப்படுத்துவதையே குறிக்கின்றோம். தமிழரின் அறியாமையும், சோம்பலும் எதிர்ப்பாற்றல் மங்கியமையுமே தமிழின் தூய்மைகெடக் காரணமாயுள்ளன. சோம்பல், அறியாமை காரணமாகவே, அறிவியல் முதலிய வளர்ந்து வரும் அறிவுத்துறைகளில் தக்க முறையில் தமிழ் கையாளப் பெறவில்லை. கலைக்கதிர், அணுக்கதிர், மோட்டார் முதலிய அறிவியல் தாளிகைகளிலும், நம்நாடு, முரசொலி, நவமணி முதலிய நாளேடுகளிலும், பல ஆங்கில, அறிவியற் சொற்கள் தமிழாக்கப் பெறாமல் அப்படியப்படியே வெளியாகின்றன. மொழிநலங்கருதாத் தமிழ் ஆசிரியர்களும், பிறரும் மொழித்தூய்மை கெடக் காரணமாவர்.

மேலை அறிவுநூல்களைப் படித்தமையாலும். தம் தன்னறிவை மிகுத்துக்கொண்டு நுணுகி ஆராய்ந்து அறிந்தமையாலும், அறிஞர் சிலர் பல, புதிய, நல்ல, மக்கள் முன்னேற்றத்திற்கு வழிசெய்கின்ற கருத்துகளை மக்கள்முன்னே வைக்கத் துடிக்கின்றனர். அவர்தம் நற்கருத்து வெளிப்பாட்டிற்குச் ''செல்வரும் துணைபோகார்; மாந்தரும்(!) மதிப்பளியார்; விழலுக்கு இறைத்த நீர்''என்ற நிலை ஏற்படின், மொழியில் கருத்துவளர்ச்சிக்கு – புதுக்கருத்துகளின் இணைப்புக்கு இடமேது? மொழிநூலறிஞர் பாவாணர் எழுதிய பல புதிய கருத்துடை நூல்கள் வெளிவரப் போதிய செல்வ வலிவு இன்மையும், அறிவியல் நூல்களைத் தமிழ்ப்படுத்தி வெளியிட முனைவார்க்குப் போதிய வாய்ப்பு இன்மையும், இந்நலிவு ஓரளவு நீங்கி வெளிவந்தவை காண்பாரற்றுக் கிடக்கின்றமையும் கருத வேண்டுகின்றோம்.

ஒவ்வொரு மொழியும் மக்கள் முன்னேற்றத்திற்கு அடிகோலும் பாதைகளில் செல்லவேண்டும். அறிவியல், மனப் பண்பாட்டு வளர்ச்சித்துறைகளே மக்கள் முன்னேற்றத்திற்குப் பயன்படும். இத்துறைகளிலேயே ஒவ்வொரு மொழியும் செல்லவேண்டும். ஆனால் மொழிநலம் பிழைப்பார், மொழியை ஆற்றுப்படுத்தும் துறைகள் மக்கள் முன்னேற்றத்திற்கு ஒவ்வாதனவாகவே உள்ளன. அம்மொழி நலம் காவா இழிஞர் மொழியை வெற்று ஆர்ப்பரிப்புகளுக்கும் போலிகளுக்கும் துணைபோகும் வகையில் திரைப்படங்களைப் பற்றிய

தாளிகைகள், பொழுதுபோக்கு ஏடுகள், மஞ்சள்(!)தாளிகைகள், இழிசுவைநூல்கள் முதலியன வெளியிடவே பயன்படுத்துகின்றனர். மொழியை அறிவின்வழி மெய்யுணர்விற்குச் செலுத்துவதை விடுத்து, மொழியை உணர்ச்சியின்வழி, வெற்றுணர்வுக்கு வழிப்படுத்து கின்றனர். வெற்றுணர்வில் மூழ்கித் திளைப்பார் மெய்யுணர்வு பெற்று லன்றோ மொழிநலங் காப்பர்? இவ்வாறு மொழியைத் தீயநெறி களில் செலுத்துவதால் விளையும் நேரடித் தீங்கைத் தமிழர் உணர வேண்டுகின்றோம்.

தமிழர்களிடையே எத்துறையிலும் ஒரு தனிப்பிடிப்பு இல்லாமை யால், வாணிக நோக்குடையார், அவர்தம் மெலிந்த நெஞ்சைத் தம் விளைவிற்கேற்ப அலைக்கழிக்கின்றனர். தமிழகத்தின் சில பண முதலைகள் 'மொழிக்காப்பு' என்ற பெயரில் மொழிநலங்காக்கவரும் மக்களின் உண்மையான முனைப்பைச் சிதறடித்துத் தங்கள் தங்கள் பொருள் வலிவை மேலும் மிகுத்துக்கொள்ள முனைகின்றனர். தங்கள் பிறதுறை ஏமாற்றுகளை (பொருள் சுரண்டல் முதலியன) அறிவாற்றல் உடையவர்கள் கண்டு உணர்ந்துகொள்ளாவண்ணம் அவர்களை மொழித்துறையில் மட்டுமே ஆற்றுப்படுத்திவிடுகின்றனர். மொழி அவர்களின் ஏமாற்றுகளை மூடிமறைக்கும் போர்வையாய்ப் பயன்படுகின்றது. புலவர்களிடையே நிகழும் சொற்போர்களும், பட்டிமன்றங்களும், தேவையற்ற இலக்கிய ஆராய்ச்சிகளும், விரி வுரைகளும் மக்கள் முன்னேற்றத்துக்கு எவ்வகையிலும் பயன்தருவ தில்லை. மேலும் இப் பண முதலைகளையும் புலவர்களையும் மொழித் தொண்டில் சிறந்தவர்கள் என்று கருதிக்கொண்டு உண்மை உண ராமல் அவர்பின்னே அவர் புகழ்பாடிகளாகவும் கைதட்டிகளாகவும், சீழ்க்கை எழுப்பிகளாகவும் திரிகின்றனர். கருமுத்து தியாகராசனும், செட்டிநாட்டு முத்தையாவும், தினத்தந்தி ஆதித்தனும், திருச்சி முத்தமிழ்க்காவலன் விசுவநாதனும், உண்மையில் தமிழைக் காப்பவர் களாய் இருந்தால், அவர்களால் தமிழைக் காக்க முடியாமற் போன மைக்குக் காரணங்கள் யாவை? அவர்களின் செல்வ வலிமையையும், மேடை முழக்கங்களையும், போலிச் செயல்களையும் இணைத்துப்பார்த்து உண்மை உணர வேண்டுகின்றோம்.

தந்நலங்காக்க மொழிநலங்கெடுக்கும் அரசியல் கட்சியினரும் இத்தமிழகத்தில்தாம் உளர். மொழிநலங்காக்க முனையும் இளைஞர் முன்நின்று ''நாங்கள் வழிகாட்டுகிறோம்'' என்று முழங்கும் பல

அரசியல் தலை(வர்)களைத் தமிழர்கள் இன்னும் அறிந்து கொள்ள வில்லையா? அறிந்தும் வாய்மூடிகளாக இருக்கின்றனரா? அல்லது அவர்கள் செய்யும் செயல்களே மொழிநலங்காக்கும் என்று நினைக் கின்றனரா? காஞ்சி அண்ணு(த்)துரையும், மீசைத்தலைவன் ம.பொ. சி.யும், கலைஞன்(!)கருணாநிதியும் இன்ன பிறரும் உண்மையில் தமிழ் காப்பவர்களா? என்று ஒவ்வொருவரும் உணர்ந்து பாருங்கள். மொழிப் போரில் உயிரீந்தவர்களைத் தங்கள் தங்கள் அரசியல் கவருட்டங் களில் பயன்படுத்திக் கொள்ள முனைபவர்கள் தமிழ்நலம் காப்பவரா?

அறிவும் உணர்வும் முற்று இளைஞர்க்கு இயல்பாகவே கவர்ச்சி யூட்டுவன துப்பறியும் புதினங்களும், வெற்றுணர்வு நூல்களுமே. இதனை யறிந்த சிலர் மொழியின்வழித்தவருக, தம் கைபோனவாறு எழுதிக் குப்பைநூல்களை வெளியிட்டுக் காசு சேர்க்கின்றனர். சில "பாட்டெழுதிகளும்" (பாவலர்கள் அல்லர்) சில "திரைக்கூத்தெழுதி களும்" 'ஒன்றுக்கு' இவ்வளவு என்று கருத்து மதிப்பறியாமல் "நூல்களை" விலைபோக்குவதைக் காண்கையில் நன்னெஞ்சங்கள் கவல் கின்றன.

இனி, தமிழராயிருந்தும் தம் பொருள் மேம்பாட்டுக்காக மொழி நலத்தைக் குறைத்துக் கூறுவாரையும் தமிழர் உணர்தல் வேண்டும். இவர்கள் தம் குறையறிவைக்கொண்டு எதை எதையோ உளறிக் கொட்டி மொழியடிமை செய்வாரின் தக்க நல் அடியார்களாய் இருப் பதும், அதன் விளைவான பணங்காசால் பகட்டாய் வாழ்வதுமே குறியாய் உடையவர்கள். இவர்களையும் தமிழர் உணர்ந்து ஒதுக்க வேண்டும். அண்ணாமலை மு. சண்முகனும், மதுரைத் தெ. பொ. மீயும், சென்னைத் தொழிற்கல்வி முத்தையனும் மொழித்துறைக்காளான்களில் இன்னும் பெயர்தெரியாப்பலரும் இவ்வகையினரே.

"நயங்கூர் உரைகள் பலசெய்வார்;
நலங்காண் வினைக்கே முழுமனதாய்
இயங்கார்; பிறர்ஆங் கெழுந்தியங்கின்
இணையார்; ஒருகால் இணைந்துவிடின்
வயங்காண் பொழுதில் பொருள்நயப்பால்
வழிப்போ வார்க்கே பழிசெயவுந்
தயங்கார்; இவர்காண் தமிழ்வளர்ப்பார்!
தமிழே! இதுநின் தலையெழுத்தே!"

என்ற பாடலைத் தமிழன்பர்கள் உய்த்துணர வேண்டுகின்ரேம். O

தீமைப் பாடு !

வானொலியில் பணியாற்றும் பெரியீரே(!)
　　தமிழகத்தில் வாழ்கின் றீரே !
தேனொலியாய்த் தமிழ்ஒலிக்கச் செய்வதெனில்
　　உங்கட்குத் தீம்பென் சொல்வீர் ?
ஏனொலிக்கச் செய்கின்றீர் எந்நேரம்
　　பிறமொழியின் இசையை யெல்லாம் ?
கானொலிபோல் தமிழ்வயலைத் தோண்டிவிட
　　இந்நாட்டில் கால்வைத் தீரோ ?

தேனொழுகு செந்தமிழை இசையொழுகப்
　　பாடுகின்ற திறமே கொண்டார்
வானொழுகு மழையாகப் பொழிந்திட்டால்
　　தமிழரெலாம் மகிழ்வா ரன்றோ ?
ஏனழுது சாகின்றான் வலிப்பு நோய்
　　வந்தவன்போல் ? எதற்கோ இந்தக்
கூன்கழுதைக் குரல் கொண்ட கொலைகாரப்
　　பயலையெலாம் கொணர்ந்தீர் ? சொல்வீர் ?

செய்திகளை அறிவிக்கும் திருவாளன்
தமிழ்மொழியில் தேர்ச்சி யின்றிப்
பிய்க்கின்றான்; தமிழ்ச் சொல்லைப் பிசைகின்றான்;
கடிக்கின்றான்; பிறநாட் டான்போல்
கைக்கின்ற ஒலியெழுப்பிக் கனித்தமிழைக்
கெடுக்கின்றான்; கந்தை யெல்லாம்
தைக்கின்றான் போல்பிறசொல் ஒன்றாக்கித்
தமிழ்மொழியை உடுக்கின் றானே!

நாடகத்தை 'நாட்டகம்'என் றுரைக் கின்றான்!
நந்தமிழை நசுக்கு கின்றான்!
கேடென்ன, வானொலியை 'ஆகாச
வாணி'யெனக் கிளத்தி விட்டால்?
வாடுகின்ற பயிருக்கு வான்மழைக்கு
மாற்றாக நெருப்பை வாரிப்
போடுகின்ற தன்மையைப்போல் வடமொழியில்
பெருங்கூச்சல் போடு கின்றான்!

தமிழுக்குப் பகைவனையே தமிழ்பேச
அழைக்கின்றீர்! தகுதி யில்லா
உமிபோன்ற ஒருசிலர்க்கு வானொலியில்
வாய்ப்பெல்லாம் உவந்து தந்து
தமிழினிலே பெரும்புலமை யுடையவர்கள்
வாராது தடுக்கின் றீரே!
திமுதிமென தமிழ்ப்பகைவர் வானொலியில்
நுழைந்துவிட்டார்! தீமைப் பாடே! O

தென்மொழி அன்பரின் மறைவு!

தென்மொழித் தொண்டரும் திருவையாற்று அரசர் கல்லூரி இறுதியாண்டு மாணவருமான திரு. சு. பாலகிருட்டிணன் அவர்கள் அண்மையில் திடுமெனக் காலமாயினர் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் தோழர் திரு. அ. ப. பாலையன் அவர்கள் தம் நண்பரின் சீரிய எண்ணங்களைச் செயற்படுத்தவும், தென்மொழியின் செம்மாந்த நடைக்கு மெய்த்துணை செய்யவும் ஆர்வமுடன் முன் வந்திருக்கின்றார். அன்னார்க்கு அன்னைத் தமிழ்மகள் இன்னருள் செய்வாளாக. —ஆசிரியர்.

மதுர. பாசுகரபாண்டியன்
(நிறைவு ஆண்டு நுண்பொறியியல்)

(இக்கட்டுரை கோவைத் தொழில் நுட்பக்கல்லூரியின் முத்தமிழ் மன்ற 4-ஆம் வெளியீடான 'தொழில் நுட்பம்' என்ற மலரிலிருந்து எடுத்ததாகும். அறிவியல் கல்வியில் தமிழகக் கல்லூரி மாணவர்கள் தமிழ் உள்ளத்தோடு எப்படி எப்படியெல்லாம் ஈடுபட்டுவருகின்றார்கள் என்பதைக் கண்டு, தென்மொழி மகிழ்ச்சியுடன் இக்கட்டுரையை வெளியிடுகின்றது. தென்மொழியின் பாதையில் அடியெடுத்து வரும் அம் மாணவர்களுக்கு நம் நன்றி. -ஆ-ர்)

புடமிடுதல்
(HEAT TREATMENT)

மாழையை (Metal)வெப்பத்தில் உட்படுத்தி, அதன் இயல்பியல் பண்புகளை (Physical properties) மாற்றும் முறைக்குப் புடமிடுதல் என்று பெயர். சில வேளைகளில் இஃது எளிதாகவும், மற்றுஞ்சில வேளைகளில் அறிவியல் நுட்பமும், தகுந்த கருவிகளும் தேவைப்படும் அளவிற்குச் சிக்கல் நிறைந்ததாகவும் இருப்பதுண்டு. புடமிடுதலின் நோக்கங்கள் இரண்டாகும். அவை:

(அ) வன்மை ஆக்கல் (Hardening)

(ஆ) மென்மை ஆக்கல் (Annealing or Softening)

புடமிடுதலில் ஏற்படும் சில வினைகள் (Operations):-

(அ) இயல்பாக்குதல் (Normalizing)

(ஆ) மென்மையாக்குதல் (Annealing)

(இ) தணித்தல் (Quenching)

(ஈ) பதமாக்குதல் (Tempering)

(உ) மேற்பரப்பை வன்மையாக்கும் முறைகளான (Surface hardening) கரியகப் புடமிடுதல், (Carburizing), காலகப் புடமிடுதல் (Nitriding) கரியக காலகப் புடமிடுதல் (Cyaniding) போன்றவை.

(அ) இயல்பாக்குதல்:

உயர்வரம்பு வெப்ப நிலைக்குமேல் (Upper critioal temp)50-ல் இருந்து 100 பாகை 'பாரன்கீட்'வரை சீராக எஃகைச் சூடாக்கி பின்னர் அமைதியான காற்றில் (Still air) அறை வெப்ப நிலைக்குக் குளிரச் செய்யும் முறைக்கு இயல்பாக்குதல் என்று பெயர். மணித்துகள் அமைப்பைச் (Grain structure) சீராக்கவும், உள்தகைவுகளை (Internal stresses) நீக்கவும், வேண்டிய இயல்பியல் பண்புகளைப் பெறவும் இம்முறை பயன்படுத்தப்படுகின்றது. பொதுவாக, குறைக் கரியக எஃகு, இடைக்கரியக எஃகு, கலவை எஃகு (Low carbon steel, Medium carbon steel and Alloy steel) முதலியவற்றை இயல்பாக்குதல் முறைக்கு உட்படுத்தலாம்.

(ஆ) மென்மையாக்குதல்:

வன்மையாக இருக்கும் எஃகை, எந்திரத்தில் எளிதாக வேலை செய்யும் அளவிற்கு, மென்மையாக மாற்றுவதே இம்முறையின் நோக்கம். எஃகை உயர்வரம்பு வெப்பநிலைக்குச் சற்று மேலாகச் சூடாக்கி, அதே வெப்பநிலையில் அரை மணியிலிருந்து 2 மணி நேரம் வரை வைத்திருந்து, பின் மெதுவாகக் குளிரச் செய்யும் முறைக்குத் தான் மென்மையாக்குதல் என்று பெயர். அளவுக்கு அதிகமான எந்திரவேலைப்பாடால் ஏற்பட்ட உள் விகாரங்களை(Internal strains) நீக்குவதற்கு இது பயன்படுகிறது.

(இ) தணித்தல்:

வரம்பு வெப்பநிலைக்குச் சூடான எஃகை நீரிலோ, உப்புக் கரைசலிலோ, எண்ணெயிலோ ஆழ்த்தி விரைவாகக் குளிரச் செய்யும் முறைக்குத் தணித்தல் என்று பெயர். எஃகை வன்மையாக்கவே தணித்தல் முறை பயன்படுத்தப்படுகின்றது. எஃகைச் சூடாக்கும்

நேரம் நம் கருத்திற்குரியதாகும். ஏனெனில் வெப்பம் வெளிப்புற மிருந்தே உட்புறம் செல்கின்றது. எஃகை மிக விரைவாக நாம் சூடாக்கினேம் என்ருல், வெளிப்புறம் உட்புறத்தைவிட மிகுதியாகச் சூடாக இருப்பதால் சீரான மணித்துகள் அமைப்பை நாம் பெறமுடி யாது. ஒழுங்கற்ற உருவமாக (Irregular shape) இருந்தாலும் மெல்ல மெல்லச் சூடேற்றுவது நல்லது. ஏனென்ருல், இஃது எஃகு வளைவதையும், பிளவுபடுவதையும் தடுக்கும். எஃகு எய்தும் வன்மை, தணிக்கும் நேரத்தையும், கரியகக் கலப்பையும், எஃகின் உருவ அளவையும் பொறுத்ததாகும். குறைக்கரியக எஃகு, இடைக்கரியக எஃகு இவற்றை வன்மைப் படுத்த விரைவான தணித்தல் தேவை யாகும்.

(ஈ) பதமாக்குதல்:

வன்மையாக்கப்பட்ட எஃகை வரம்பு வெப்பநிலைக்குச் சற்றுக் கீழ் சூடாக்கி, வேண்டிய நேர அளவில் குளிர்ச்சி செய்யும் முறைக்குப் பத மாக்குதல் என்று பெயர். இம் முறையும் எஃகை மென்மை ஆக்கு கின்றதென்ருலும், இயல்பியல் பண்புகளை விரைவாகக்கட்டுப்படுத்துவ திலும், சில வேளைகளில் மென்மை ஆக்கும் முறையைப்போல் அந்த அளவிற்கு எஃகை மென்மையாக்காத வகையிலும் இது மென்மை யாக்குதலில் (annealing) இருந்து வேறுபடுகின்றது.

தணித்தலினல் வன்மையாக்கப்பட்ட எஃகு உடையும் தன்மைய தாக (Brittle) இருப்பதால், வன்மையையும் உடையும் தன்மையை யும் நம் வேலைப்பாட்டிற்குத் தகுந்த அளவில் குறைக்கமுடியும். இந்தப் பண்புகள் குறைபடுவதால், நீட்சிவலி(Tensile strength) குறைந்து, கம்பியாக்குந் தன்மை (Ductility)யும், மிண்மையும் (Toughness) கூடுகின்றன.

கரியகப்புடமிடுதல்:

மேற்பரப்பை வன்மையாக்கும் இந்த முறை பழமையானதாகும். எஃகை கரியகப் பொருட்களுடன் (Carbonacious material)சேர்த்து வைத்துச் சிவப்புநிறமாக்க் காய்ச்சுதல் கரியகப்புடமிடுதலாகும். இரும்பு, வரம்பு வெப்பநிலைக்கு அண்மையிலும், அதற்கு மேலும் கரி யகத்தை ஈர்க்கும் (Affinity) பண்புடையது. கரியகம் மாழைக்குட் புகுந்து இரும்புடன் ஒரு திண்மக் கரைசலை (Solid solution) உண்

டாக்கி மேற்பரப்பை உயர் கரியக எஃகாக மாற்றுகின்றது. பொதுவாகப் புடமிடுதலில் (Heat treatment) பயனற்ற, குறைக்கரியக எஃகையே இம் முறையில் பயன்படுத்துகின்றனர். அதற்குப்பின் அந்த எஃகைச் சரியானபடி புடமிட்டால் மிகவன்மையான வெளிப் பரப்பும், மென்மையான வளையும் உட்பகுதியும் கொண்டதாக இருக்கும்.

காலகப்புடமிடுதல்:

இம்முறையும் கரியகப்புடமிடுதலை ஒத்ததெனினும், இங்கு வேறு பொருளும், வேறு முறையும் கையாளப்படுகின்றது. எஃகை நவச் சாரத் (Ammonia)துடன் வைத்து ஏறத்தாழ 950 'பாரன்கீட்'வரை வெப்பப்படுத்தி, அந்த வெப்பநிலையிலேயே சிறிதுநேரம் வைத்திருக்க வேண்டும். காலகம் (Nitrogen) வளியிலிருந்து (Gas) இரும்புக்குள் புகுந்து மேற்பரப்பில் மென்மையான காலகப்படிவம் (Nitrides)உண்டாக்குகிறது. காலகம் சில குறிப்பிட்ட தனிமங்களுடன் கூடி, மிகுந்த வன்மையை உண்டாக்க முடியும். எனவே காலகப்புடமிடுதலுக்காக குறிப்பிட்ட கலவை எஃகுகள் உள்ளன. இதற்கு மலிவெள்ளியம் $1-1^1/_2$ விழுக்காட்டில் தகுதியுள்ளதென முடிவு செய்துள்ளனர்.

காலகப்புடமிடுதல் மிகுதியான வன்மையைக் (900–1100 'பிரின்னல்' வன்மை) கொடுக்கின்றது. இது கரியகப்புடமிடுதல் கொடுக்கும் வன்மையைவிட மிகுதி. நீர், உப்புநீர் போன்றவற்றின் அரிப்புவினையை (Corrosive action) இம் முறையில் வன்மையாக்கப் பட்ட எஃகின் மேற்பரப்பு, திறமையாக எதிர்த்துத் தாங்குகின்றது.

கரியக–காலகப்புடமிடுதல்:

பொதுவான புடமிடுதலில் பயன் அற்ற குறைக்கரியக எஃகின் மேற்பரப்பை வன்மையாக்க இம் முறை பயன்படுகிறது. இம் முறையில் கரியகமும் காலகமும் எஃகுள் ஈர்க்கப்படுகின்றன. உருக்கப்பட்டு மதிப்பாக 1600 பாகை 'பாரன்கீட்' வெப்பத்தில் இருக்கும் உவரிய–எரிகம் (Sodium cynide) எஃகை அமிழ்த்த வேண்டும். வேண்டிய வன்மையின் ஆழத்தைப் பொறுத்து அமிழ்த்தும் நேரம் மாறும். அதன்பின் எஃகை நீரிலோ, நெய்(Oil)யிலோ தணித்தால் எஃகு வன்மையாகும்.

*

—புலவர். தி. நா. அறிவுஒளி—

திறனாய்வாளர் அழுகை !

'தாயிட்ட பெயரை நாய் இட்டு அழைக்கும்' என்பது தமிழில் வழங்கும் அரிய பழமொழி. தன் குழந்தைக்குத் தாய் எந்தப் பெயரை இட்டு அழைக்கிறளோ, அந்தப் பெயரை உயர்ந்தோர் மட்டுமின்றித் தாழ்ந்தோரும் கூட வழங்குவர் என்பது அம்முதுமொழியின் கருத்து. நம் மதிப்பீடு நம்மைப் பற்றி எவ்வண்ணம் இருக்கிறதோ, அதுபோலவே பிறரின் மதிப்பீடும் அமையக்கூடும் என்பது அதன் குறிப்புக் கருத்து.

எழுத்தாளர்கள் தாம் பெறும் குழந்தைகளான இலக்கியங்களைப் பற்றி உயரிய கருத்துக் கொண்டால் உலகத்தறிஞர்களும் உயரிய கருத்துக் கொள்வர். ஒரு மொழியின் எழுத்தாளர்கள் (எழுத்தாளர் என்ற சொல்லால் படைப்பிலக்கியம் படைப்போர் அனைவரையும்—'பாவலர், நாடகாசிரியர், சிறுகதையாளர், புதின ஆசிரியர், கட்டுரையாளர், திறனாய்வாளர்'—குறிப்பிடுகிறேன்.) தம் மொழியின் இலக்கிய ஆக்கங்களைப்பற்றி உயரிய கருத்துக் கொண்டிருக்க வேண்டும். குறுகிய கொள்கைகளாலும், வாணிக நோக்காலும், இன—குல உணர்வு

களாலும், தனிப் பகைமைகள்–காழ்ப்புகளாலும், கட்சிப் பற்றாலும், செல்வம்–செல்வாக்கு ஆகியவற்றாலும் ஒரு மொழியின் பல்துறை-பல் வகை–ஆக்கங்களைக் குறைத்தும், மறைத்தும் கீழ்மையான கருத்து களை எழுதுவதும், பேசுவதும் அறிவுடைமையாகாது; பண்பாடு மாகாது; எழுத்தறமும் ஆகாது. (பண்பாடு நாகரிகம், அறம், திற னாய்வு, அறிவு ஆகியவற்றில் அவர்களுக்கு நம்பிக்கையிருக்கும் என்றே கருதுகிறேன். அவற்றின் மீதும் நம்பிக்கையின்மை 'புதுமை' காரணமாக உண்டாகியிருந்தால், நாமென்ன செய்ய முடியும்?)

தமிழ்மொழியைத் தற்காலத்தில் தாங்களே வளப் படுத்துவதாகச் சில 'சில்லறை எழுத்தாளர்கள்' முடிவு கட்டிக் கொண்டிருப்பதை நாம் கவனிக்கவே வேண்டும். மொழி என்பது பலவகைப்பட்ட பலதுறை அறிஞர்களால் வளர்க்கப்பட வேண்டியதொன்று என்பதை யாவரும் அறிவர். ஒரு மொழியின் வளமோ, ஒரு மொழியின் இலக்கிய வளமோ ஓரிருவராலோ, ஒரு சிலராலோ மட்டும் உயர்ந்துவிடும்; அல்லது வளர்ந்து விடும் எனக் கருதுவதும், முழங்குவதும், செம்மாந்து திரிவ தும் முறையன்று; அஃது உண்மையுமன்று.

முற்போக்கெழுத்தாளர் எனக் கூறிக் கொள்வோர் மரபுவழி எழுத்தாளர் எனச் சிலரை ஒதுக்கிவைத்து இனவேற்றுமையை வளர்க்கக் காண்கிறோம். பண்டைக் காலத்தில் மனுமுறையைக் காட்டி இனவேற்றுமையை வளர்த்தவர்களின் கால்வழியினராக இவர்கள் 'மறுபிறவி' எடுத்திருப்பதை உண்மைத் தமிழர்கள் தம் உள்ளத்தில் திண்ணமாகப் பதித்துக் கொள்ள வேண்டும். தமிழை வலிமை குறைந்த மொழியாக்க வேண்டுமென்பது இனவேற்றுமை வெறியர் தம் எண்ணமாகும். தமிழின் தனிச் செம்மையைச் சீர் குலைத்தால் அம்மொழியின் வளமான பேராற்றல் அழியும். அவ்வாறு அழிந்தால் அது 'கலப்புமொழி'யுருவை அடையும். அந்நிலைக்கு மொழியாற்றல் குன்றினால் பண்டைத் தமிழிலக்கியங்களின் செல்வாக்கும்–வளமும் மக்கள் எண்ணத்தினின்று நீங்கி மறையும். பண்டையிலக்கியங்கள் செல்வாக்கிழந்து, வழக்கொழிந்தால் பண்டைத்தமிழின மரபு, பண்டைத் தமிழ்ப்பண்பாடு, நாகரிகம்,பண்டைத் தமிழறம் ஆகியவை மறைந்தொழியும். அந்நிலையை உருவாக்கினால் தமிழினமே தலை தடுமாறிப் புதுக்கலப்பு முறைகளை ஏற்றுத் தனித்தன்மை கெட்ட வாழ்வில் ஈடுபடும் என்பதே இனைய 'இனவேற்றுமை எழுத்தாளர்' தம் கரவான உள்நோக்கமாகும்.

எழுத்தாளர் மன்றங்கள் கூட இனவேற்றுமை எழுத்தாளரின் பாசறைகளான துயரக் கதையை என்னென்று கூறுவது! எழுத்தாளர்கள் கருத்துவேற்றுமைகளைக் கடந்து ஒன்றுகூடி உறவாடி யியங்கும் இடமாக எழுத்தாளர் மன்றங்கள் அமையவேண்டும். அந் நிலை தமிழகத்தில் இன்னும் உருவாகாதது வருத்தத்தையே விளைவிக்கிறது. அறிஞர். சோமலெ. போன்றோர் அந் நிலையை உருவாக்க விரும்பியும் இயலா நிலை யமைந்தமை எண்ணுதற்குரியது!

இன நன்மை நாடும் தமிழ் எழுத்தாளர்களைவிடத் தந்நலம் தேடும் எழுத்தாளர்களே இத்தகு 'இலக்கிய அவலங்களுக்கு' வேர் முதல். 'தனித்தமிழ்க் கொள்கை'யே திறமான இலக்கியம் வளராததற்கு அடிப்படை' எனத் திறனாய்வாளர்(?)சிலர் எழுதித் 'தள்ள'க் காண்கிறோம்! 'தனித்தமிழில்' பற்றில்லாதவர்கள் எழுதித் 'தள்ளி'யவற்றில் எதுவும் 'நோபல் பரிசு' பெறக் காணவில்லையே; நாம்? இஃது 'ஒரு சொற்போர் முறையா? 'தனித்தமிழ்க் கொள்கை'யைக் கண்டு இவ்வளவு அச்சமும் அதிர்ச்சியும் 'முற்போக்கு எழுத்துலகில்' இருப்பது வியப்பளிக்கக் கூடியதுதான்! தெரிந்தோ தெரியாமலோ 'படைப்பிலக்கி'யம் எழுத வந்துவிட்டவர்களுக்கு இலக்கணத்தின் மீது பெரும் பகை! மரபின் மீது மிக மிகப் பெரும் பகை! பண்டை இலக்கியங்கள் என்றால் நேர்வாளம்! இவர்களுக்கு நேரான அறிவாசிரியர்கள் தமிழகத்தில் இருந்தவர்-இருப்பவர்கள் அல்லர்; எல்லாம் வெளிநாட்டினர்தாம்! சாமர் சட்மாம்; எமிங்குவே, தால்சுதாய், மாப்பசான், ஆல்பிரட்டு மொராவியோ, தாமசுமன் ...போன்ற பலர் ஆவர். மேல் நாடு மட்டுமன்று; கீழ் நாடு-வட நாடு-தென்னாடு அனைத்துலக இலக்கிய-அறிவு வளங்கள் நமக்கு நனி இன்றியமையாதன என்பது நம் அழுத்தமான கொள்கை. உலக மொழிகள் அத்தனையிலிருந்தும் கலை-இலக்கிய-அறிவுச் செல்வங்களைத் தமிழ்மொழி பெற்று உலகளாவிச் செழித்துக் கொழிக்கவேண்டும். ஆனால் அதற்காக நம் நாட்டு அறிஞர்களை-மரபை - விட்டொழிக்கவோ, பழிக்கவோ, புறக்கணிக்கவோ வேண்டியதில்லை. இதுதான் நம் எண்ணமாகும்.

'தமிழில் அஃது இல்லை; இஃது இல்லை' என்று அழுவதே திறனாய் வாளர் சிலரின் திருப்பணியாகி விட்டது. ஏதோ, இவர்கள் வீட்டுத் திண்ணையிலமர்ந்து அழுதாலும்; 'போகட்டும்; புலம்பட்டும்!' என விட்டு விடலாம். பிறமொழியாளர் கூடும் மாநாடுகளிலும்,

தமிழ்க் கழக மாநாடுகளிலும், வானொலியிலும், பிறமொழி இதழ்களிலும், திறனாய்வுக் கூட்டங்களிலும் இந்த 'ஒப்பாரி' ஓயாக் கூச்சலிடுவதைக் காண நம் நெஞ்சு திடுக்கிடுகிறது. தமிழில் இல்லாதது போகட்டும்; இருப்பதையும் சொல்லமாட்டேன் என்கிறார்களே; இந்தக் கண்ணுள்ள குருடர்களை என்ன கூறி வாழ்த்த முடியும்?

தங்கள் வட்டத்திற்குள் சிக்கிய ஏழெட்டுப்பேரைத்தவிர பிற எழுத்தாளர் தம் படைப்புகளை இந்த மேதைகள், படிக்கவில்லையோ என்று ஐயம் நமக்குண்டாகிறது. கதை, புதினம், பாட்டு, நாடகம் மட்டுந்தாம் இலக்கியமா? கட்டுரை முதலிய பல துறைகள் இலக்கிய மல்லவா? இந்தத் துறைகளில் உழைத்தவர்கள் இவர்கள் கண்களில் படாதது ஏனோ? நம் நாட்டாரைப் புதுமையான துறைகளில் எண்ணுமாறு தூண்டியவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே யாவர். அவர்களை நாம் மிகப் பாராட்ட வேண்டும். அத்தகையவர்களுக்கு 'நன்றி' செய்த பெரியவர் ஒருவர் பெரியார்: ஈ. வே. இரா வையும். குத்தூசி குருசாமி யையும், கைவல்யம் அடிகளையும் இன்னும் பல சீர்திருத்த எண்ணக்காரர்களையும் குறிப்பிட 'மறந்தே போய்விட்டார்' அவர் மறதியை நாம் மறக்க முடியுமா? இவர்களைக் கட்டாயம் குறிப்பிட்டு ஆகவேண்டுமா? என்று சிலர் கேட்கலாம். ஆம், கட்டாயம் குறிப்பிட வேண்டும். இவர்களைத்தாம் முதலில் குறிப்பிட வேண்டும். மாறுபட்ட கருத்துகளுக்கு மதிப்பு நல்கும் 'மனநாகரிகம்' வளர வேண்டுமாயின், இதைக் குறிப்பிட்டே யாகவேண்டும். ஆனால் மறந்தும் 'உண்மை'யைச் சொல்லிவிடுவார்களா 'நம் முற்போக்குத் திறனாய்வாளர்கள்?' 'முற்போக்கு' என்ற நல்ல சொல்லைச் சிலர் தமக்கென்று உரிமையாக்கிக் கொண்டதால் அச்சொல்லுக்கே ஓரிழுக்குகூட உண்டாகி விட்டதோ என அறிஞர் சிலர் ஐயுறவும் அஞ்சவுங்கூட நேர்ந்து விட்டது! சுவையுணர்வு ஆளுக்கு ஆள் மாறுபடுவது இயற்கை. காதல் சிலர்க்கு விருப்பந்தரும்; அவலம் சிலர்க்கு ஆர்வந் தரும்; அச்சம் சிலர்க்கு அடுக்கும்; நகைச் சுவையே சிலர்க்கு அன்பூட்டும். ஆண்மை சிலரைப் பிணிக்கும். வியப்பு சிலரை ஆளும்...இவ்வகையில் மெய்ப்பாடுகள் மட்டுமின்றி, கருத்துகளும் நடைகளும் ஆளுக்கு ஏற்றவாறு கவர்ச்சியூட்டுவதில் வேறுபாடுகள் அமையும். இந்தச்சுவை வேற்றுமைகளுக் கேற்பவே இலக்கிய மதிப்பீடு அமையும்.

இசையில் காதலில்லாதவன் இசைத்திறனாய்வாளனானால்...இசை, வசையாகிவிடாதா? காதலில் சிக்கிய திறனாய்வாளர் தமிழர் மறத்தை விளக்கும் நூலுக்குத் தேர்ந்த திறனாய்வு எழுத இயலுமா? கட்சிக்கு அடிமைப்பட்ட எழுத்தாளனால் நடுநிலைக் கருத்தமைந்த நூலைச் செரித்துக் கொள்ள வியலுமா? ஆகவே தம் தீர்ப்பே முடிவானதாகத் திறனாய்வாளர் சிலர் முழக்குவதை நாம் விழிப்போடும் கவனத்தோடும் நடுநிலையோடும் ஆய்வாற்றலோடும் நேர்மையோடும் அணுகிப் புரிந்து தெளிய வேண்டும்.

'நடைமுறைகளை அப்படியே விளக்கிவிட்டு, எழுத்தாளன் ஒதுங்கி நிற்கவேண்டும்' என்று திறனாய்வாளர் சிலர் முழக்குவர். இதற்கு ஓர் எழுத்தாளனோ, எழுத்தோ வேண்டுமா? தன்னறிவின் ஆராய்ச்சி முடிவு இன்னது என்பதைப் பதிக்காமல் 'நிழற்படம்' பிடிப்பது எவ்வாறு இலக்கியமாகும்? நாள் வாழ்வில் நிகழும் குற்றங்குறைகளை, அவலங்களை, ஒழுக்கக்கேடுகளை விரித்து விளக்கி எழுதுவது மறுமலர்ச்சி இலக்கியமாகிவிடுமா? ஒருசார்பு படாமல் நல்ல நடுநிலைத் தீர்வையளித்து அதைத் திட்டவட்டமாக நிறுவி விளக்குவது ஒரு வகையில் சுவையோடு பயனைத்தரலாம்.

தீமைகள், குற்றங்கள், கரிசுகளைத் தெள்ளத் தெளிவாக விளக்குவதுகூட இன்றியமையாததன்று. இன்னங் கூறுவதானால் இவற்றை வெளிப்படையாக விளக்குவது, தெரியாதவர்களுக்கு முரசறைவிப்பதாகவே ஆகும். ஒருவகையில் குற்றங்களை விளக்கி எழுதுவதுகூட மாபெருங் குற்றமேயாகும் என்பேன்.

உணவு விடுதிகளில் கற்பழிப்பு நிகழ்வதை விளக்கிச் சிறுகதை, நெடுங்கதை, புதினம் எழுதிடின், என்ன பயன் விளையும்? ஒரு மன்பதையின் இழிந்த போக்கின் விளம்பரம்தானே இது? இஃது இலக்கியப்பணியாகுமா? இதை விளக்கி எழுதுவதால் மக்கள் பெறும் அறவுரை–புதுக்கருத்துத் தெளிவு–யாது? குடும்ப வாழ்வின் சிக்கல்களை 'மட்டும்' எழுதிவிடுவது போதுமா? சிக்கலின் அடிப்படையையும், அதன் கோளாற்றின் தன்மையையும், அதை நீக்கவேண்டிய மருந்தையும் தராத எழுத்து ஏன்? இவ்வாறு மருந்துதரப் புகுந்த புது எழுத்தாளர்கள் சிலர் 'நஞ்சைக் கக்கிவிட்டிருப்பதையும் நாம் சுட்டிக் காட்டியே தீரவேண்டும். எழுத்தாளன் தன் வாழ்வில் பண்பட்ட தெளிவாளனாக இருந்தாலொழிய இத்தகு எழுத்துகளை எழுதுவது இடர்

விளக்கும். புலனழுக்கற்ற அந்தணாளர்களான எழுத்தாளர்களே மன்பதைச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் எழுத்தைத் திறமாக எழுத முடியும்.

இலக்கியம் என்ற பெயரை எதற்கு வேண்டுமாயினும் சூட்டிக் கொள்ளும் கேட்பாரற்ற நிலை அமைந்து விட்டதால், தாம் எழுதுவதெல்லாம படைப்பிலக்கியமென்று கதைக்க முன்வந்துவிட்டனர் எழுத்தாளர் எனக் கூறிக்கொள்வோர். 'திருக்குறள்' ஒன்று தமிழுக்குப் போதுமா? அடுத்த பேரிலக்கியம் வேண்டாமா? எனக்கேட்டு மொழி ஆக்கத்தில் தனக்கிருக்கும் பேராவலை-பேரார்வத்தைத்-'தீட்டிய' ஓர் 'அறிஞர்' அந்தக் குறளையே எடுத்தாண்டு நகையாடி இகழவும செய்யும நிலைகளைக் காணும்போது, இச் 'சாய்க்கடை எழுத்தாளர்' களால் கட்டாயம தமிழிலக்கியம வளராது என்பதில் நமக்கு உறுதி பிறக்கிறது. அறிவையும் ஆராய்ச்சியையும் தூண்டி வளர்க்கும் கோடிக்கணக்கான அறிவிலக்கியங்கள், ஆய்வுநூல்கள் பிறமொழிகளில் குவிந்துள்ளன. அவற்றை மொழிபெயர்த்து அளித்தாலும் தமிழ் சிறக்கும்! இவ்வாறு 'இல்லை ஒப்பாரி' பாடியழும் திறனாய்வாளர்கள் அழுகையை நிறுத்தி, ஆக்கத்தைப் படைத்தாலும் மொழி வளம்பெறும்; இலக்கியம் செழிக்கும். O

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7–25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்களுக்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி னென்ன?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு!

உரிமை வேட்டல்!

உணர்வுப்பித்தன்

வில்லெடுத்துப் போரிட்ட வென்றித் தமிழினத்தார்
சொல்லெடுத்துச் சோர்ந்திட்டார் சோற்றுக்கே – தொல்லுலகில்
மல்லெடுத்து வென்றதொல் மாண்பை மிகநினைந்தே
வல்லடிமைச் சேற்றை விலக்கு!

வெஞ்சிறை என்செய்யும்? வேட்டெஃகம் என்செய்யும்
கெஞ்சிப் பெறுவதன்று வாழ்வுரிமை – வெஞ்சிறையால்
உள்ளம் துயருறுங்கொல்; ஒலிவேட்டுக் குண்டதுவும்
பிள்ளை விளையாடும் குண்டு!

வாழ்வு பெரிதோ? வழிப்பெருமை பேணுது
தாழ்வுற்ற வாழ்வு சிறுமைத்தே – சூழ்பகைவர்
சிண்டை யறுத்துச் செருக்கடக்க வாய்ப்பின்றி
உண்டிருத்தல் நன்றோ உணர் ! O

தமிழுக்கடிமை அயரார் !

வசந்தன்

பொருளிற் கடிமை கள்ளர் – வெறும்
புகழிற் கடிமை புல்லர் ! – நல்
அருளிற் கடிமை ஆன்றோர் – தமிழ்
அமிழ்திற் கடிமை சான்றோர் !

கன்னிக் கடிமை கடையர் – அழி
காசிற் கடிமை மடயர் – தூய்
அன்பிற் கடிமை தக்கார் – தமிழ்
அன்னைக் கடிமை மிக்கோர் !

செருக்கிற் கடிமை சிறியார் – புறச்
செழிப்பிற் கடிமை 'அறியார்' – நல்
அறிவிற் கடிமை வல்லார் – தமிழ்
ஐயைக் கடிமை நல்லார் !

வயிற்றுக் கடிமை இழிஞர் – தீ
வளர்ச்சிக் கடிமை அழிவர்! – எழில்
இயற்கைக் கடிமை புலவர் – தமிழ்
எழுச்சிக் கடிமை தமிழர் !

சோற்றிற் கடிமை ஆவோர் – நாளும்
சாவிற் கடிமை போவார் ! – தன்
நாட்டிற் கடிமை தொண்டர் – தமிழ
நங்கைக் கடிமை நண்பர் !

விழிப்பிற் கடிமை நோயர் – நெஞ்சின்
வெறுப்புக் கடிமை தீயர் ! – நல்
உழைப்பிற் கடிமை உயர்வார் – தமிழ்
உணர்ச்சிக் கடிமை அயரார் ! O

மாந்தனெனும் மலர் !

குயில்'

தன்னேர் இலாத தலைவன்செய் தோட்டத்து
மின்னேரும் மாந்தனெனும் மென்மலர்தான்—பொன்னே ! கேள்
வாய்ந்தமலர் போலன்றி வையத்து வாழ்ந்திருந்து
மாய்ந்தபினும் வீசும் மணம்.

நாற்றமுள நான்வகையும் நாளும் ஒரு படித்தாய்
மாற்றமே யின்றி மணம் வீசும்—ஏற்றமுள
மக்கட் பெருமலரோ மாறும் அகவைக்குத்
தக்கபடி வீசும் தகைத்து.

அன்புக் கொடியில் அழகுறவே பூத்துத்தன்
சின்னக் குறுவிழியால் சீர்ந்து—பொன்னுடலால்
மால்கொள்ளப் பெற்றோர் மருவி நகையரும்பி
பால்மணம் வீசும் பரிந்து.

தெருவில் விளையாடித் தேனூர் தமிழ்போல்
பொருவில் இருகுரவர் போற்ற—மருவும்
கழலசைய ஓடிக் கனிவாய் இதழால்
மழலைமணம் வீசும் மலர்ந்து.

ஏடெடுத்துக் கையில் எழுதுகோல் தானெடுத்து
மாடுடைய பெற்றோர் மகிழ்வுறவே—பீடுடைய
நல்லாசான் பாலணைந்து நற்றமிழில் வல்லவனுய்க்
கல்விமணம் வீசும் களித்து.

வாழ்வின் பயனெய்த வானன்(பு) அருளாக
தாழ்வில் துணையிருக்கத் தக்கவளைச்— சூழ்ந்து
துருவித் துணையேற்றுத் தூயவாழ் வென்னும்
திருமணத்தை வீசும் தெளித்து.

மங்கலமென் வாழ்வுக்கு மாண்பான நன்கலமாம்
பொங்கு மதலையர்கள் போதந்து—தங்கியுள
தன்னலம் மாறித் தழைக்கிற மன்னலமாய்
அன்புமணம் வீசும் அணைத்து.

இன்பமொடு துன்பம் இயல்பென் றறிந்ததற்பின்
மன்பதையும் அவ்வுணர்வால் மாண்புறவே-தன்கீழ்ச்
செறியும் மரபிற்குத் தேர்ந்துணர்த்தி நல்ல
அறிவுமணம் வீசும் அமைந்து.

தன்மகவு தன்குடும்பம் தன்னுறவு என்றெல்லாம்
உன்னும் நிலைபோய் உலகுயர – துன்னும்
இருள்போல் துயரம் எதிர்த்தாலும் நற்றெண்(டு)
அருள்மணம் வீசும் அளித்து.

தன்னுடலை நாட்டுக்கும் தன்னுயிரை இன்மொழிக்கும்
மன்னுலகில் தந்துவக்கும் மாண்பாளன்-பொன்றித்
துகணிலத்தே சேர்ந்தாலும் தொல்லுலகில் பொன்றுப்
புகழ்மணத்தை வீசும் பொலிந்து. O

'ஏக்கம்'

இரா. மகிழ்நன்.

பொன்னிக் கரையின் பொலிவைத் தேடிப்
போனர் ஒருவர் போனர் அவர்தம்
தன்னேர் இல்லாத் தோளில் தூங்க
மானேர் நோக்கில் மருண்டேன் தோழி!

நிலவின் அழகில் நெஞ்சம் அழிந்து
செல்வார் ஒருவர் செல்வார் அவர்தம்
கலையில் தோய்ந்து கையைப் பிடிக்க
நிலையை மறந்து நிற்பேன் தோழி!

பூவைக் காட்டிப் பொருளைச் சொல்லிப்
பாவை மகிழ்ந்து நின்றார் ஒருவர்
பாவை மகிழ்ந்து நின்றார் அவர்தம்
நாவின் இனிமை நயப்பேன் தோழி?

மயில்தன் துணையோ டாடக் கண்டு
பயிலும் இன்பத் துயரம் கொள்வார்
பயிலத் துயரம் கொண்டார் அவர்தம்
துயிற்குத் துணைநான் ஆவேன் தோழி!! O

—புலவர். திருமேனி. நாகராசன், காரைக்கால்.

சூள்

முன்னுரை:— இக்கால மக்கள் புறத்துறையில் பெரிதும் சிறந்துள் ளனர்; அகத்துறையில் அவர் பெரிதும் இழிந்துள்ளனர். விண்வெளித் தொடர்பை அணிமையதாக்கிய மாந்தன் உளத்தொடர்பைச் சேய்மைய தாக்கியுள்ளான். மக்கள்தம் உணர்வுகள் ஆழமற்றுப் போய்விட்டன. பண்டு வாழ்ந்திருந்த மாந்தரொடு, இக்காலத்தார் பெரிதும் முரணியுள் ளனர். முன்னவர் உயிராய்ப் போற்றிய உயர் கொள்கைகளையெல்லாம், பின்னவர் மயிராய் மதித்து வருகின்றனர். என்னை, சூள் என்பது பண்டைய மக்கள் உயிர்க்கும் மானத்திற்கும் இறுதி வந்துழியல்லது உரையாத் தன்மையதாகவும், இக்காலத்தார் அதனைத் துரும்பாய்த் துணிந்து நாடொறும் நவின்றுவரும் தன்மையாலறிக. சூள்தான் அத்துணை உயர்வுடையதோ வெனில், ஆமென்க.

சூள் இன்னதென்பது: சூளாவது, ஒருவன் தான் வாய்த்ததை முடியாதொழியின் தன்றால் இவ்வுலகில் தன்னுயிரினும் மேலதாய் விரும்பும் பொருளை இழப்பேனென்றலாம். சூள் ஒப்பில் உயர்பொருள் மேல் நிற்றற்குரிய உரனுடையாளர் மொழியில் மட்டுமே அருகி வருவது. இதனைச் "சபதம்" என்பார் வடநூலார்.

சூளுரைப்பொருள்கள்: சூளுரைப் பொருளாவது சூள் உரைத்தற் குரிய பொருளாம். சூளுரைப்பொருளெலாம் வைபத்து உயர்வுடைப் பொருளே. அப்பொருள்கள் உரைப்பாளர் உள்ளக் கருத்தினைத் தெள் ளிதின் புலப்படுத்துவன. அவைகொண்டு சூளுரைப் போரை அளக்க லாகும். அவை பல் திறத்த:—கற்புவழி நிற்கும் பொற்புறு மங்கை யும், செந்தமிழ்வல்ல செந்நாப்புலவரும், செம்மை திறம்பாச் செங் கோலும், நாட்டின் நல்லணியாய குடியும், ஒப்பில் உணர்ச்சியொத்த உயர்நிலை நண்பரும், வானுயர் சுற்றமும், வருவிருந்தும் பிறவுமாம். ஈண்டுச் சுட்டியன சிலவே. சுட்டாதனவும் உளவாதலின், அவை வந்த வழிக் கண்டு கொள்க.

சூளுரைப்போர்: சூளுரை செப்வாரெல்லாரும் சூளுரைப்போராவர். அவர் மேன்மையுறு தன்மையர்; மனத்திட்பம் மிக்கவர்; அவர் பல்திறத்தர். பைந்தமிழ் வளர்த்த பாண்டியரும், சோற்று வளம் பெருக்கிய சோழரும், கற்புடைத் தெய்வத்திற்குக் கோட்டங் கண்ட சேரரும், வேண்டிய விளைவிக்கு மாற்றல் வாய்ந்த பத்தினிப் பெண்டி ரும் பிறருமாவர். இங்குக் குறிக்கப்பட்டார் சிலரே. குறியாதவரும் பல ராதலின் அவரை யெல்லாம் ஆண்டாண்டுக்காண்க.

சான்றுகள்: பாண்டியருள் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனென்பான் பகைவரை இரியப் பொரேனுயின் குடிபழி தூற்றப் புலவர் பாடாதொழிய உறவோர் நல்குரவுற இரப்போர்க்குக் கொடாதழியக் கடவனெனச் சூளுரைத்தான். (புறம்; பாடலெண்: எஉ) சோழருள் நலங்கிள்ளியென்பான் நெடுங்கிள்ளி பகை முடியாதொழி யின் பரத்தையைச் சேர்வேனுக வென்றனன். (புறம்; பாடலெண்: எங) சேரருள் சேரன் செங்குட்டுவன் கனக விசயரை வென்று அவர்தம் முடித்தலையில் கண்ணகிக்குப் படிவம் அமைக்கக் கல்கொணராது போயின், பகைவரை ஒட்டாமே குடிகட்குப் பழி செய்த கொடுங் கோலனுகுக வெனச் சூளுரைத்தான். (சிலம்பு; வஞ்சிக்காண்டம்; கால் கோட்கதை13–18) இனிப் பத்தினித் தெய்வமாகிய கண்ணகியும், தன்கற்பையே சூளுரைப் பொருளாய்க் கொண்டு சூளுரைத்தாள். (சிலம்பு; மதுரைக்காண்டம்; வஞ்சினமாலை 36–37)

சூள் பொய்த்தலின் ஏதம்: சூள் பொய்த்தல் உய்தியில் குற்ற மாகும். அதனைப் பொய்ப்பின் அதனுய தீவினை வியாது பின் சென் றடும் என்பார் சான்றோர்.''உலகில் காண்கின்றவர் மனங்கொள்ளுமாறு

சூளுற்ற மனத்தையுடைய ஒருவன் அச் சூளினைப் பொய்த்து விடுவா ஞயின் தன்னைச் சார்ந்த சுற்றமெல்லாம் வருந்துமாறு குன்றன்ன வான்பொருள் உடையாஞயினும் அதனை வளர்த்தல் தேற்ரு ஒருவன் தன் இரும்பெரும் ஒக்கல் அழியத் தானும் அழிவதைப் போன்று கெடுவான். இம்மைக்கண் இதுவேயன்றி மறுமைக் கண்ணும் புத்தேள் உலகு அடையும் பெற்றிமை அவனுக்கு வாய்த்த விடத்தும், சூள் பொய்த்த தீவினை கூரிய வாளின் வாய் போன்றிருந்து அவனை அவ் வுலகை நுகர் வியாமற்றடுக்கும்'' என்று கலித்தொகை-நெய்தற்கலி கூஉ-ஆம் பாட்டில் கூறப்பெற்றுள்ளது.

முடிவுரை: எனவே, பண்டு உயர்ந்தோர் வாய் இருந்த சூள் இன்று தாழ்ந்தோரிடமெல்லாம் தலை தடுமாறித் தாழ்ந்ததாதலின், அதனை மேனிலையுறுத்தல் அறிவுடையார் கடனும். அதற்கு மாந்தரா வார் செயத்தக்கது யாதெனில், ''இப்பகலில் இப் படக் காட்சியைக் காணுதொழியின் என் பெயர் இன்னதன்று'' எனவும், இவ்வரசியல் தலைவர் இத் தேர்தலில் வென்றிலரேல் என்றலை மழிப்பேன்'' எனவும் சூளுரை செய்யும் போக்கைக் கதுமெனக் கைவிடுக. அறிவிலிகாள்! இவை பரத்தவோ சூள்? அன்றே! உயிர்க்கும் மானத்திற்கும் இறுதி வந்துழியல்லது சூளினை உரையாது வாழ்வீராக. O

O உங்களின் செல்வக் குழந்தைகள்தாம் நம் நாட்டை ஆளப் போகும் வருங்கால மன்னர்கள் !

O உங்களின் பிறங்கடைகள் நல்லவர்களாகவும் வல்லவர்களா கவும் உருப்பெற்றுத் தங்களின் வாழ்க்கையைச் செழிப்பாக்கிக் கொள்ள வேண்டுமல்லவா ?

O உங்களையும் அறியாமல் உங்கள் செல்வங்களின்பால் பொதிந்து கிடக்கும் அறிவாற்றலையும் நல்லுணர்வையும் கீண்டி விடுவதற் கென்றே தமிழ் மண்ணில் இசைபாடி வருகின்றது

தமிழ்ச்சிட்டு!

O "தமிழ்ச்சிட்டு" உங்கள் குழந்தைகளை நோக்கிப் பறந்துவர

O உருபா. இரண்டு உடனே அனுப்பி உறுப்பினராக்குங்கள்.

தமிழ்ச்சிட்டு கடலூர்-1

தென்மொழி

தனித்தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

வேலையமர்த்த அறிக்கை.

அண்மையில் விரிவாக்கப்பட விருக்கும் தென்மொழி அச்சக, அலுவலகங்களில் கீழ்க்காணும் பகுதிகளில் பணியாற்றத் தகுதியும், திறமையும், பொறுப்புமுள்ள பணியாளர்கள் தேவை. விருப்பமுள்ளவர்கள் தங்கள் தங்கள் கைப்பட எழுதி விண்ணப்பிக்கவும்.

1 அச்சுப்பகுதி :

1 அச்சுக்கோப்பாளர்கள் : (Compositors) (அறுவர்)

திறமை: கோத்தல் (Composing), பிரித்தல் (Distribution), பக்கங்கட்டல் (Paging), முடுக்கல் (Imposing) முதலியவற்றில் திறமுள்ளவர்கள்.

2 பொறியாளர் (Machine Men) (மூவர்)

திறமை: மிதிபொறி (Treadle), உருளைப்பொறி (Cylinder) வெட்டுப்பொறி (Cutting Machine) முதலியவற்றைத் தன்னுற்றலி லும் மின்னுற்றலிலும் இயக்கத் திறமுள்ளவர்கள்.

3 நூற் கட்டுநர் (Binders) (நால்வர்)

திறமை: அட்டைக்கட்டு, துணிக்கட்டு (Calico Binding), தோல்கட்டு (Leather Binding), கோடிடுதல் (Ruling) முதலியவற்றில் திறமுள்ளவர்கள்.

இம் முப்பகுதியினர்க்கும் தகுதிகள்: குறைந்தது 8-ஆம் வகுப்புக் கல்வி, நன்னடத்தை, பொறுப்பு, நாணயம், தோற்றம் முதலியவற்றுடன் 20க்கு மேல் 35க்கு உட்பட்ட அகவையினர்.

ஊதியம்: திறமைக்கேற்ப உருபா 60-இலிருந்து 100 வரை-பிற தொழிற்கூடச் சலுகைகள், தொழில் வளர்ச்சிக்கேற்ப ஊதிய உயர்வு உண்டு.

2 அலுவலகப் பகுதி:

1 எழுத்தர்கள் (Clerks) [நால்வர்]

கல்வி: பள்ளி இறுதித் தேர்வு அல்லது அதற்கிணையான கல்வி.
அகவை: 20 க்கு மேல் 30க்குள்.
ஊதியம்: திறமைக் கேற்ப உருபா 80-இலிருந்து 100 வரை.

2 கணக்கர் Accountant) [ஒருவர்]

கல்வி: கணக்குத் துறையில் கலைப்பட்டம், அல்லது கணக்காளர் (Accountant) தேர்வு பெற்றவர்.

ஊதியம்: உருபா 100-இலிருந்து-150 வரை (தகுதிக்கேற்ப) தொழில் வளர்ச்சிக்கேற்ப ஊதிய உயர்வு உண்டு.

அலுவலகப் பகுதிக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவார் பொறுப்புத் தொகை உருபா 200 கொடுக்க முன் வருதல் வேண்டும்.

அழைத்தாலன்றி நேரில் வருதல் கூடாது.

பிற விளக்கங்களுக்கு.

கடலூர்-1 }
1-4-67 }

மேலாளர்.
தென்மொழி

மக்களவை

இதற்குப் பெயர்தான் அரசியல்!

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். தென்மொழியின் தரமான அன்பர்களில் நானும் ஒருவன். சில மாதங்களுக்கு முன்னர் ''நிகரமை இளைஞர் சுற்றறிப்பு நூலக''த்தின் (The Young Sccialists' Circulating Library) சார்பில் தங்கள் இதழுக்கு ஒரு சிறுதொகையை அனுப்பிவைத்தவனும் நானே. எதர்க்கும், எவற்கும் அஞ்சாமல் தரமான கருத்துகளைத் துணிவுடன் வெளியிடும் தங்கள் இதழின் தறுகண் ஆண்மையைக் கண்டு நான் வியந்து பாராட்டுகிறேன்.

நான் பேராயக் கட்சியின்பால் பற்றுடைய ஒரு தொண்டன்; தமிழன்; மொழியுணர்வு மிக்கவன். தங்களின் 'மார்ச்சு, 67' இதழில் இதற்குப் பெயர்தான் அரசியல்!" என்ற 'ஆசிரியவுரை'யைப் பல முறைகள் படித்துப் பார்த்தேன். நான் ஒரு குறிப்பிட்ட கட்சியின்பால் பற்றுடையவன் என்பதை அறவே மறந்துவிட்டு, உறங்கிக் கொண்டிருந்த என்னுடைய மனச்சான்றைச் சற்றே எழுப்பி விட்டுவிட்டு, அத

னைப் பல முறைகள் படித்துப் பார்த்தேன். உண்மையை எழுதுகின்றேன்—தமிழனுக்குப் பொய் கூறத் தெரியாதன்றோ? அவ்வாசிரியவுரை நெஞ்சை விம்மச் செய்து, என் கண்களைக் கலங்கச் செய்து விட்டது ("Politics is the last refuge of a Scoundrel") என்றான் பேரறிஞன் சான்சன். அரசியல் துறையில் ஈடுபடுகின்றவர்களில் பலபேர் கடைந்தெடுத்த கடையர்களாக மாறிவிடுகின்ற இந் நிலையில், தங்களின் ஆசிரியவுரை உறங்கிக் கொண்டிருந்த என் மனவுணர்வைக் கிளர்ந்தெழச் செய்துவிட்டது. அவ்வுரையின் ஒவ்வோர் எழுத்தும் எத்துணைப் பொறுப்போடும், கவலையோடும், ஆண்மையோடும் எழுதப்பட்டிருக்கிறது என்பதை அறியும் போது என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை! நான் ஏழை. இல்லாவிட்டால் அவ்வுரையைப் பொன் தகடுகளில் பொறிக்கச் செய்து மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் வைத்துவிட ஏற்பாடுகள் செய்துவிடுவேன். தமிழர் குமுகாயம் மட்டுமே படிக்கத் தந்த உரையன்று அது. இதனை உலகமே படித்தல் வேண்டும். அறிஞர். ம. இலெ. தங்கப்பா அவர்களை அதனை ஆங்கிலத்தில் பெயர்க்கச் சொல்லுங்கள். இஃது என் அன்புக் கட்டளை! — ஒரு தரமான இதழன்பன் ஆசிரியருக்குக் கட்டளையும் பிறப்பிப்பதில் தவறில்லையன்றோ?

எ — ஆம் பக்கத்தில் எதிர்க் கட்சிகளின் பொறுப்பற்ற போக்கை எள்ளி நகையாடியிருக்கிறீர்கள். "மக்களே! அழுகல் காய்கறிகளை மாற்ற வேண்டுமெனில் ஆட்சியை மாற்றுங்கள்! என்று தொண்டை வற்றக் கத்தும்" அரசியல்காரர்களின் நெறியற்ற போக்கைச் சுட்டிக் காட்டியுள்ளீர்கள். ௧௦ — ஆம் பக்கத்தில், தமிழகத்தின் தேர்வாளர்களில் 63, 72, 826 பேர் பேராயக் கட்சியைச் சார்ந்து நின்றதையும் 62, 15, 143 பேர் தி.மு.க வைச் சார்ந்து நின்றதையும் சுட்டிக் காட்டி, தி. மு. க. வை விடப் பேராயக் கட்சி 1, 60,683 ஒப்போலைகள் மிகுதியாகப் பெற்றும் ஆட்சியை அமைக்க முடியாமல் போனதோடு சட்ட மன்றத்தில் தி. மு. க. வை விட 89 இடங்கள் குறைவாகப் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளீர்கள். இஃது அரசியல் பார்வையாளர்களின் ஓர்தலுக்குரியதாகும். பேராயக்கட்சியின் மேடைகளில் திரு. குமரி அனந்தன் போன்றவர்கள் இந்தக் கருத்தினை எடுத்து விளக்கி வருவதைக் கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன்.

மேலும் 13 – ஆம் பக்கத்தில்" தி.மு.க வின் வெற்றி நமக்கு அளிக்கும் மகிழ்வை விடப் பேராயக் கட்சியின் தோல்வி நமக்கு வருத்தத்தையே கொடுத்தது."எனத் தொடங்கிப் பேராயக் கட்சியின் சிறப்புகளை எடுத்துச் சொல்லி... "தமிழகத்தின் முன்னேற்றங் கண்டு தங்கள் இனத்திற்கு எங்குத் தீங்கு வந்து விடுமோ என்று வயிறு எரிந்து செத்துக் கொண்டிருக்கும் திரு. இராசாசியைத் தவிர; அவர் பாங்கில் உள்ள திரு. அண்ணாத்துரை அவர்களுக்குக்கூட உள்ளூர மகிழ்ச்சி இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இம்மலர்ச்சிக்கெல்லாம் (பேராயக் கட்சியின் சார்பில் இருந்தாலும்) மக்கள் நலம் ஒன்றே குறிக்கோளாகவும், தமிழர் நலம் ஒன்றே உட்கிடையாகவும் உள்ள திரு. காமராசரும் நல்லெண்ணக்காரர் பிறருமே காரணமாவார்" என்று விளக்கி, 'மலர்ந்து வரும் தமிழ்நாட்டு நலமும் அதன் அடியாக வளர்ந்துவரும் தமிழர் நலமும் திரு. காமராசரால் வழிப்படுத்தப்பட்ட அமைப்புகளாகும்.' எனச் சுட்டிக் காட்டியிருப்பது தங்களின் அரசியல் பெருந்தன்மையை வெளிப்படுத்துகின்றது. இப்படி உண்மையை உள்ளபடியே எடுத்தியம்பும் காரணத்தால், தங்களைத் 'தேர்தல் வெற்றி தோல்விகளால் மாறிவிடும் ஒரு கீழ்நிலை அரசியல் காரராகக் கருதாமல்', அடுத்த தலைமுறையைப் பற்றி மிகவும் விழிப்போடும் பொறுப்போடும் எண்ணிச் செயல்படும் தேர்ந்த ஓர் அரசியல் ஆய்வாளராகக் கருதத் துணிகின்றேன்! ஏனென்றால் 'கவறு' நிறைந்த அரசியலுக்குப் பலர் இரையாகிவிடுகின்றனர்.

ஆசிரியவுரையின் இறுதிப் பகுதியில் ஆட்சியமைத்திருக்கும் தி.மு.கழகத்திற்கு வாழ்த்துரையும் அறிவுரையும் வழங்கியிருக்கிறீர்கள் "நல்லது செய்பவர் யாராக இருந்தாலும் பாராட்டி அவர்க்குத்துணையாக இருக்கத்தானே வேண்டும்" என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அந்தப் பகுதி அமைந்திருக்கிறது. ஊன்றிப் படிக்கும் போது அந்தப்பகுதியை ஓர் எச்சரிக்கையாகவும் ஆளுநர் கொள்ள இடமிருக்கின்றது. சேறும் சகதியும் நிரம்பிய அரசியல் குட்டையில் இத்தகைய மணங்கமழும் மலர்கள் — கருத்துச்செல்வங்கள் மலர்வது அருமையிலும் அருமையாகும்! இவற்றையெல்லாம் காணும் போது இந்நாட்டரசியலில் ஆர்வம் கொண்டிருக்கும் என்போன்றார்க்குப் பெருமகிழ்வும் பொறுப்பும் ஏற்படுகின்றன. தங்களின் தரமான அவ்வாசிரியவுரையைப் பாராட்டுவதோடு தங்களின் தூவல்(பேனா) முனையிலிருந்து

இத்தகைய சீரிய விழுமிய கருத்துகளைத் தொடர்ந்து அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு இம் முடங்கலை முடிக்கின்றேன். வணக்கம்.

— வீ. இரா. சந்திரன், அயன்புரம்; சென்னை - உகூ.

தென்மொழி அறிவுறுத்தட்டும்!

பேரன்பு கெழுமிய ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம் பல. இத் திங்கள் தென்மொழி கண்ணுற்றேன். அதில் நடுநிலை நின்று நவிலும் நேரிய கூரிய சீரிய ஆசிரிய உரை நெஞ்சுகொளத்தக்கதாய் உள்ளது. பொருளியல் முன்னேற்றத்தால் தமிழகம் தடைப்பட்டு ஓரோவொருகால் முடங்கப்பெறுமெனினும் இன, மொழியியல் முறையால் மாற்றம் பெற்றுத் துலங்கும் என்பது தமிழ்நலம் கருதுவார் அனைவரும் நம்புவதும் எதிர்பார்ப்பதும் ஆகும். இன்றேல், [பழைய ஆட்சி நீடித்திருக்கு மெனில்] மக்கள் நிலை அடக்குமுறைகட்கு அஞ்சிக் கவலும் நிலையாகவே இருந்திருக்கும். அத்துடன் மொழி வல்லாண்மையும் அதிகார மிடுக்கும் சேர்ந்து—தமிழ்க்குப் பாடுபடுவோரையும் பிறரையும் மிகவும் நசுக்கி இருக்கும். இத்தகைய கேடுகளுக்குத் துணை போகவல்ல பத்தவத்சலம் அவர்கட்கு மேலிடத்தில் இருந்து ஊக்கம் மேலும் தரப்பட்டும் இருக்கும்.

எனவே இற்றை ஆட்சியில் வடக்கினின்றும் வரத்தக்க வளமும் நலமும் பெறேம் எனினும் ஆண்டும் ஈண்டும் அழுத்திப் பிடித்த வல்லாண்மை ஒழிந்தது.

இன்றை ஆட்சியில் தமிழ் முடுக்கமாய்ப் புகுத்தப்பெறும் எனினும்—அது 'தமிழாக' இருக்குமா என்பதே நம் கவலை. இதனை அறிவுறுத்தத் தென்மொழி ஆவன செய்திடல் வேண்டும். மற்றும் உயர் திரு. பாவாணர் அவர்களை முதல்வராகக் கொண்ட மொழிக்குழு ஒன்றையும் ஏற்படுத்தி-தனித்தமிழ் ஆக்கம்-மொழிபெயர்ப்பு ஆகிய மொழியியல் முன்னேற்றத்தில் உண்மை நாட்டம் கொள்ளுமாறு செய்வித்தலும் வேண்டும். தன்மதிப்பு இயக்கத்தில் இருந்த இற்றைக் கழகத்தாரேனும் சாதி மதச் சழக்குகளை ஒழித்துக்கட்ட — அறிவுறுத்தப்பெறல் வேண்டும். இனியேனும் தமிழின் பெருமை உலகுக்கு எட்டட்டும்.

— மு. மகிழரசன், சென்னை - கூச.

தென்மொழியின் தெளிந்த கொள்கைகள்.

1. தமிழ் நிலத்துள் தமிழே ஆட்சிமொழி ஆதல் வேண்டும். மாநில இணைப்பு மொழியாகவும் உலகத் தொடர்பு மொழியாகவும் இருக்கத் தகுதியுடைய மொழி ஆங்கிலமே. இவ்விரு மொழிகளுமே தொடக்கக் கல்வி முதல் கல்லூரிக் கல்விவரை பயிற்றப் பெறுதல் வேண்டும். இவையன்றிப் பிற கலை, நுண்கலை, தொழில் அறிவியல் முதலிய பல் துறைக் கல்வியும் தமிழிலேயே பயிற்றல் வேண்டும்.

2. தமிழ் நாட்டுள் தமிழர்களுக்காக நடத்தப் பெறும் தமிழ்த் தாளிகைகள், எழுதப்பெறும் நூல்கள் எல்லாவற்றும் தூய தனித் தமிழே வழங்கப் பெறுதல் வேண்டும். இவ்வமைப்பிற் கடிப்படையாக எல்லா முயற்சிகளையும் செய்தல்.

3. தமிழக அரசியல் கட்சிகள் தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் செய்துவரும் தொண்டில் போலியும், பொய்மையும் கலவா வண்ணம் அவற்றின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிப்பதுடன் தேவையான பொழுது கண்டிக்கவும் அவற்றை நல்வழியில் திருப்பவுமான நடுநிலைக்குழு ஒன்றினை அமைத்துச் செயற்படல்.

4. தூய தனித் தமிழ் நூல்களையும், பிறநாட்டுஅறிவியல் நூல்களையும், தொடர்ந்து வெளியிட்டு வருவதன்வழி மொழியை வளர்த்தலும் மக்களின் பல்வகைப் பட்ட அறியாமையை நீக்குதலும், இவ்வழி உலகத் தமிழரோடும் பிற நாட்டாரோடும் தொடர்பு கொள்ளுதலும்.

5. குமுகாயத் துறையில் சாதிகளையும் அவற்றோடு துணைபோவாரையும் அரசியல் துறையில் மக்களை மடமைக்கோ அரசியல் ஆரவாரங்களுக்கோ அழைத்துச் செல்லும் கட்சிகளையும், அறமற்ற ஆட்சியமைப்பையும், பொருளியல் துறையில் செல்வ ஏற்ற தாழ்வையும், போலி வாணிகப் புனைசுருட்டல்களையும் சுட்டிக்காட்டிக் கண்டிப்பதுடன் இத்துறைகளில் ஏமாற்றமடையா வழி மக்களை எச்சரித்தல்.

6. சிறுபான்மையினரின் மொழி நலம் பண்பாடு இவையுள்ளிட்ட உரிமை கெடா வண்ணம் செப்பமான குடியரசமைப்புக்கு வழியமைக்கா விடில், வடவர்க்கே தனியொரு வல்லாண்மையரசாக இயங்கும் நடுவணாட்சித் தொடர்பிலிருந்து தமிழகத்தை விடுவித்தலும் தமிழ அரசை நிலைப்படுத்தலும்.

7. இவ்வடிப்படைக் கொள்கைகள் என்றும் சிதைந்துபோகா வண்ணம் இவ்வுலகம் உள்ளவும் நீடித்து நிற்கச் செய்யவும் தொடர்ந்து செயற்படவும் ஒரு நிலையான அமைப்பை அமைத்தலும் அதில் அவ்வக்காலத்து உழைப்புளம் கொண்ட அறிவினரைத் தொடர்பு கொளச் செய்தலும் ஆகும்.